
# மருதம்



போரதீவுப்பற்று பிரதேச
கலாசார விழா சிறப்புமலர்–2018

பிரதேச செயலகம்,
போரதீவுப்பற்று, வெல்லாவெளி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதம்

"போரதீவுப்பற்று பிரதேச மக்களின்
வாழ்வியலும் மரபு மாற்றமும்"

போரதீவுப்பற்று பிரதேச
கலாசார விழா சிறப்புமலர்–2018

வெளியீடு
பிரதேச செயலகம்,
போரதீவுப்பற்று,
வெல்லாவெளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதம்

போரதீவுப்பற்று பிரதேச

கலாசார விழா சிறப்புமலர்–2018


## நூல் தரவு:

| | | |
|---|---|---|
| பெயர் | : | " மருதம் " |
| வகை | : | கலை, இலக்கிய சிறப்பு மலர். |
| வெளியீடு | : | கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், போரதீவுப்பற்று. |
| பதிப்பு | : | 2018 |
| பக்கங்கள் | : | 76 |
| பிரதிகள் | : | 300 |
| அச்சுப்பதிப்பு | : | மாருதி அச்சகம், களுதாவளை. |


**பொருளடக்கம்** **பக்கம்**


| | |
|---|---|
| வாழ்த்துச் செய்திகள், என்னுரை, தெளிவுரை | i-x |
| போரதீவுப்பற்றுப் பிரதேசத்தின் பண்டைய உணவு முறைகள் | 01 |
| வான்மதி வாசிகசாலை | 09 |
| போரதீவுப்பற்றுப் பிரதேசபாரம்பரிய விளையாட்டுக்கள் | 12 |
| பண்பாடிழந்தோம் | 15 |
| போரதீவுப்பற்று மக்களால் பயன்படுத்தப்பட்ட பண்டைக்கால பாவனைப் பொருட்கள் | 17 |
| எமது பிரதேச பண்டைக்கால மக்களின் சொற்களின் பதங்கள் | 23 |
| பசுமை வளம் பொங்கும் படுவான் கரையே | 28 |
| போரதீவுப்பற்றுப் பிரதேச மக்களின் வாழ்விட இல்லங்கள் | 31 |
| நஞ்சுப்போத்தலா ? நாலுமுழக் கயிறா ? தஞ்சம் | 34 |
| விவசாயத் தொழில்சார் உபகரணங்களும் அதன் பாவனைகளும் | 35 |
| போரதீவுப் பற்றும் கலைவளர்ச்சியும் | 39 |
| போரதீவுப்பற்றின் உடைப்பாரம்பரியமும் தற்காலமும் | 41 |
| பொலிப்பாடல் | 46 |
| வான்மழை பொழியுமா | 49 |
| இயற்கை அழகு | 51 |
| கௌரவம் பெறும் கலைஞர்கள் | 52 |
| பரிசு பெறுவோர் விபரம் | 58 |
| நன்றிகள்.... | 60 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தின் கலாசார பேரவையினால் வெளியிடப்படும் "மருதம்" சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மனித வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்ததான கலைகள் மனிதசமூகத்தை ஒழுங்கமைக்கின்றது. ஒவ்வொரு பிரதேசத்திற்கும் அந்தந்த பிரதேசத் துக்குரிய தனித்தன்மை, சிறப்பு தருவது கலைகள். எமது மூதாதையர்கள் வாழும்போது நமக்காகவும் நமது தலைமுறை யினருக்காகவும் விட்டுச் செல்கின்ற கலை அம்சங்களை நாமும் பேணிக்காக்க வேண்டியது எமது கடமையும் கூட.

போரதீவுப்பற்று பிரதேச செயலக மக்களின் பண்டைய வாழ்வியலிலும் மரபிலும் இணைந்ததான கலை அம்சங்களை தொகுப்பாக வெளியிடும் இந்த முயற்சியில் போரதீவுப்பற்று பிரதேசத்தை பிரதிபலிக்கின்ற எழுத்தாளர்கள் கலைஞர்களின் கைவண்ணங்களில் பாரம்பரிய விளையாட்டுகள், பாரம்பரிய உணவு வகைகள், பாரம்பரிய இல்ல அமைப்புகள், சமய வழிபாட்டு முறைகள் போன்றவற்றை உள்ளடக்கியதான ஆக்கங்கள் எழுத்துருப் பெறுகின்றமை சிறப்புக்குரிய விடயமாகும்.

எனவே இந்நூல் வெளியீட்டுக்கு முன்னின்று உழைத்த பிரதேச செயலாளர், மலர் வெளியீட்டு குழுவினர் மற்றும் பங்களிப்பு செய்த உத்தியோகஸ்தர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**மா.உதயகுமார்**
அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளரும்
மாவட்ட செயலகம்,
மட்டக்களப்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

ஒரு பிரதேசத்தின் கலைகளையும் கலாசார விழுமியங் களையும் வெளிக் கொணர்பவையாகவே அப்பிரதேச மக்களின் வாழ்வியல் அம்சங்கள் விளங்குகின்றன. இது பிரதேசத்திற்குப் பிரதேசம், இடத்துக்கிடம் வேறுபட்ட தன்மை கொண்டவையாக காணப்படுகின்றன. இதன் அடிப்படையிலேதான் எமது போரதீவுப் பற்று பிரதேச மக்களின் வாழ்வியல் அம்சங்களும் நோக்கப் படுகின்றன.

போரதீவுப்பற்று பிரதேச கலாசார பேரவையானது இவ்வருடம் வெளியிடவுள்ள மருதம் சிறப்பு மலரானது "போரதீவுப்பற்று பிரதேச மக்களின் வாழ்வியலும் மரபு மாற்றமும்" என்னும் தொனிப்பொருளில் மலர் ஆக்கங்கள் உள்ளூர் எழுத்தாளர்களிடமிருந்து பெறப்பட்டு வடிவமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கலைகளையும், கலாசார பண்புகளையும் எடுத்துக்காட்டும் நிகழ்வாகவே கலாசார விழாக்கள் அமைகின்றன. கலைகளுக்கும், கலைஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் ஒரு களம் அமைக்கும் இடமாகவே இதனை நாம் நோக்க முடியும். மக்களின் பாரம்பரியங்களை அழியாமல் பாதுகாக்கும் பொருட்டும், அவற்றிற்கு புத்துயிரூட்டும் முகமாகவும் நாம் இவ்வாறான விழாக்களை ஒழுங்கு செய்கின்றோம். இவ் விழாவின் போது வழமைபோல் நூல் வெளியீடு, கலைஞர் கௌரவம் என்பன இடம்பெறுவது சிறப்புக்குரிய அம்சமாகும்.

இவ்விழா சிறப்புற அமைவதற்கு எம்மோடு பக்கபலமாயிருக்கின்ற கலாசார பேரவை, மலர்க்குழு, விழாக்குழுவினர் மற்றும் எமது அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்வதுடன் இம்மலரானது வாசகர்கள் மத்தியில் தனித்துவமான இடத்தினைப் பிடிக்கவேண்டும் என வாழ்த்துவதுடன், இம் மலரில் எனது வாழ்த்துச் செய்தி இடம் பெறுவதனையிட்டு மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

**ஆர்.ராகுலநாயகி,**
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
போரதீவுப்பற்று.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

போரதீவுப்பற்று - வெல்லாவெளி பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் நடாத்தப்படுகின்ற 2018ம் ஆண்டுக்கான பிரதேச கலாசார விழாவிற்கும் அவ்விழாவில் ஞாபகார்த்தமாக வெளிவரும் "மருதம்" சிறப்பு மலருக்கும் எனது வாழ்த்தினை வழங்குவதில் அகமகிழ்வடைகின்றேன்.

ஒரு இனக்குழுமத்தின் இருப்பை வெளிக்காட்டுவதில் கலை இலக்கியங்கள் முதன்மை பெறுகின்றன. மனித சிந்தனையை நல்வழிப்படுத்தி, ஆளுமை மிக்க மனிதனை உருவாக்குவதில் கலையும் இலக்கியமும் பெரும்பங்கு வகிக்கின்றன. கால மாற்றத்தினால் மாறி வரும் வாழ்வியல் முறைமையினால் பண்பாட்டு, பாரம்பரிய, ஒழுக்க விழுமியங்கள் திரிபடைந்து கொண்டு செல்வதனால் பண்பாட்டு பாரம்பரிய பெறுமதிகளை எதிர்கால சந்ததியினர் அறியாதவர்களாக உள்ளனர். இது போன்ற காத்திரமான ஆவணப்படுத்தல்கள் மூலம் அவற்றை இளந்தலைமுறையினர் அறியும் வகையில் எழுத்துருவில் ஆவணமாக்கி கையளிப்பது பாராட்டத்தக்க விடயம்.

இறைவனின் படைப்பில் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் தனித்துவமான சிறப்புகள் காணப்படுகின்றது. அந்தவகையில் போரதீவுப்பற்று பிரதேசம் வயலும் வயல் சார்ந்த மருத நில சூழலை சிறப்பாக கொண்டமைந்த பிரதேசமாகும். அப்பிரதேசத்தின் பண்பாடு, கலை கலாசாரம், மக்கள் வாழ்வியல் என்பனவற்றையும், அவை தற்கால நவீன வாழ்வியல் முறைமையில் எவ்வாறான மாற்றங்களுக்குட்பட்டுள்ளன என்பதையும் இளந்தலை முறையினருக்கும் கலைஞர்களுக்கும் எடுத்துக்காட்டும் வகையில் ஆவணமாக வெளிவருகின்ற "மருதம்" - "போரதீவுப்பற்று மக்களின் வாழ்வியலும் மரபு மாற்றமும்" சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறான காத்திரமான செயற்பாடுகளில் முன்னின்று செயற்படும் பிரதேச செயலாளருக்கும் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச கலாசார பேரவை உறுப்பினர்கள், மற்றும் பிரதேச கலைஞர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

**திருமதி. வளர்மதி ரவீந்திரன்,**
மாகாணப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

மனிதன் ஒரு சமூகப் பிராணி. மனித நாகரிக வளர்ச்சியில் காலத்துக்காலம் பல்வேறு காரணங்களினால் ஒரு சமூகம் தொன்றுதொட்டு பின்பற்றிவந்த நடைமுறைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வந்திருக்கின்றது. அரசியல், பொருளாதாரம், அறிவுசார் கண்டுபிடிப்புக்கள், உலகமயமாக்கம் என பல்வேறு காரணிகள் மக்களின் வாழ்வியலின் மீது பல்வேறு தாக்கங்களையும் மாற்றங்களையும் ஏற்படுத்துவதில் பங்களிப்பை வழங்கியிருக்கின்றது. ஒரு சமூகக் குழுமத்தினால் ஆரம்ப காலத்தில் பின்பற்றப்பட்ட பழக்கவழக்கங்கள் மற்றும் நடைமுறைகள் தொடர்ச்சியாக பின்பற்றுப்படும் போது அது அச்சமூகத்தின் மரபாகின்றது. அது இடையறாத் தொடர்ச்சியை கொண்டிருக்கின்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இருந்தபோதிலும் நடைமுறை வாழ்க்கையில் நவீனத்தின் தாக்கத்தினால் மரபு மாற்றம் கண்டு வந்திருக்கின்றது. இது தவிர்க்க முடியாததாகும். இந்நிலையில் முன்னைய வாழ்க்கைமுறையில் இருந்த மகிழ்ச்சி மற்றும் சமூக ஒருமைப்பாடு தொடர்பில் இன்றைய சௌகரியமான வாழ்க்கை சூழலிலும் எண்ணத்தோன்றுகின்றது.

ஒரு சமூகக் குழுமத்தின் கடந்தகால வாழ்க்கைமுறையே அக் குழுமத்தின் வாழ்வியல் வரலாறாகவும் பரிணமிக்கின்றது. அதனைப் பதிவு செய்ய வேண்டியதும் ஆவணப்படுத்த வேண்டியதும் காலத்தின் கட்டாய தேவையாகும். இந்நிலையில் " போரதீவுப்பற்று மக்களின் வாழ்வியலும் மரபும் மாற்றமும்" என்ற தலைப்பிலே போரதீவுப்பற்று பிரதேச மக்களின் மரபு ரீதியான வாழ்க்கை முறையையும் அதன் மாற்றங்களையும் ஆவணப்படுத்த வேண்டும் என்ற உயரிய சிந்தனையில் தலைமை வகித்து வழிகாட்டிய போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் இ. ராகுலநாயகி அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள். போரதீவுப்பற்று பிரதேச கலாசார பேரவையினால் வெளியிடப்படுகின்ற "மருதம்" இதழின் வெளியீட்டுக்காக பங்களித்த கலாசார பேரவையின் உறுப்பினர்கள், இதழ்க்குழு உறுப்பினர்கள், இதற்காக முன்னின்று செயற்படும் கலாசார உத்தியோகத்தர் ச.சோமசுந்தரம், பிரதேச செயலக உத்தியோத்தர்கள், இப்பிரதேசத்தின் கலைஞர்கள், இவ்விதழுக்கு ஆக்கங்களை வழங்கியவர்கள், இதழ் வெளியீட்டுக்காகவும் கலாசார விழாவுக்காகவும் பங்களிப்பு நல்கிய சமூக மற்றும் கலை ஆர்வலர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது பாராட்டுக் களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் உள்ளம் உவகை யடைவதோடு மருதம் இதழ் வெளியீடும் கலாசார விழாவும் சிறக்க என் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.




## திரு. சி. புவனேந்திரன்

உதவி பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம், போரதீவுப் பற்று.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவுரை

மட்டக்களப்புக்கு தென்பால் அமைந்துள்ள பிரதேசம். மட்டக்களப்பு வாவியை எல்லையாகக் கொண்டு எழுவான்கரை, படுவான்கரை என இரு பிரதேசங்களாக பண்டைக்காலம் முதல் பேணப்பட்டு வருகின்றது. இந்த அடிப்படையிலேயே மருத நிலம் சார்ந்த பிரதேசமாக போரதீவுப்பற்று பிரதேசம் விளங்குகின்றது. இதனால் இப்பிரதேசம் எடுக்கும் கலாசார விழாவின் போது வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு "மருதம்" என்னும் பெயர் கொண்டு விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

2015 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோரு ஆண்டும் தொடர்ச்சியாக வெளிவரும் இம்மலர் ஒவ்வோர் கருப்பொருளை மையமாக வைத்து அதன் உள்ளடக்க ஆக்கங்கள் அமைந்திருப்பது இதன் தனித்தன்மையை வெளிப் படுத்துபவையாக அமைகின்றது. இந்த அடிப்படையிலேயே இம்முறை வெளிவரும் இம்மலர் "போரதீவுப்பற்று பிரதேச மக்களின் வாழ்வியலும் மரபு மாற்றமும்" என்னும் கருப்பொருளை மையமாகக்கொண்டு பிரதேச எழுத்தாளர்களிடமிருந்து ஆக்கங்கள் பெறப்பட்டு தொகுக்கப்பட்ட நூலுருவாக்கமாகவே இம் மருதம் சிறப்புமலர் விளங்குகின்றது.

இதற்கேற்ப இம்மலரில் இடம்பெறும் ஆக்கத் தலைப்புக்கள் அனைத்தும் கலாசார பேரவையின் சிபாரிசுக்கமைய பிரதேச எழுத்தாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு; அவர்களால் எழுதப்பட்ட ஆக்கங்களாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதனால் எம்மால் எதிர்பார்க்கப்பட்டது போன்று இப் பிரதேசத்திலுள்ள அனைத்து விடயங்களும் இம்மலரில் உள்ளடக்கப் பட்டிருக்கும் எனவும் எதிர்பார்க்கின்றேன்.

இத்தகைய ஆக்கங்கள் அனைத்தும் பிரதேச மக்களின் வாழ்வியலோடு தொடர்புபட்டவையாகவே தேர்ந்தெடுக்கப்பட்டன. பாரம்பரிய விளையாட் டுக்கள், பாரம்பரிய உணவு வகைகள், சமயச் சடங்குகள் பற்றியதாக விளங்குவதுடன், இவ்விடயம் தொடர்பானது, பாரம்பரிய தொழில்கள், பாரம்பரிய பேச்சு வழக்கு மொழிகள், பாரம்பரிய கலைகள் என்ற அடிப்படையில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விடயங்கள் உள்ளடக்கப்பட்ட ஆக்கங்கள் இம்மலரில் அமைந்திருப்பது இதன் சிறப்பியல்புக்கு இன்னோர் எடுத்துக்காட்டாகும்.

இதன் அடிப்படையில் சில ஆக்கங்கள் சிறந்த தேடல் முயற்சிகள் மூலம் அமைக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டுகிறேன். இருந்தும் ஆக்கத்தில் இடம்பெறும் விடயங்கள் தொடர்பாக கலைஞர்களின் கருத்துக்களுக்கும், விமர்சனங்களுக்கும் அந்தந்த எழுத்தாளர்களே வகை கூறுபவர்களாக இருப்பார்கள் என்பதையும் கூற விரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த ஆண்டு இடம்பெற்ற கலாசார விழாவின்போது மூன்று ஆண்டுக்குரிய மருதம் சிறப்பு மலர் ஒரே தடவையில் வெளியிடப்பட்டன. மலர் வெளியீடு என்பது ஒவ்வோர் ஆண்டும் வெளிவர வேண்டும் என்ற பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி அம்மணி அவர்களின் எதிர்பார்ப்புக்கமைய வெளிவராமலுள்ள ஆண்டுக்குரிய மூன்று மருதம் சிறப்பு மலர் ஒரே தடவையில் வெளிவந்தது மற்றுமொரு சிறப்புக்குரிய விடயமாகும்.

மேலும் இவ்வருடம் இடம்பெறும் விழாவினையும், இம்மலரினையும் சிறந்த முறையில் நெறிப்படுத்தி எமக்கு ஆலோசனை வழங்கி செயற்படுத்திவரும் பிரதேச செயலாளர் அவர்களுக்கும் உதவிப் பிரதேச செயலாளர் அவர்களுக்கும் மற்றும் கலாசார பேரவை, மலர்க்குழு போன்றவற்றுக்கும் இவ்விடத்தில் கலாசார உத்தியோகத்தர் என்னும் வகையில் நன்றி கூறுவதற்கு கடமைப்பட்டுள்ளேன்.

எனவே இவ்விழாவும், இவ்விழாவின்போது வெளிவரும் இம்மலரும் சிறப்படைய என்னையும் ஆட்கொள்ளும் எல்லாம் வல்ல இறைவனின் தாழ்பணிந்து எனது தெளிவுரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி



## திரு.ச.சோமசுந்தரம்

கலாசார உத்தியோகஸ்தர்
பிரதேச செயலகம்,
போரதீவுப் பற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரதீவுப்பற்று பிரதேச கலாசார பேரவை-2018

தலைவர் : ஆர். ராகுலநாயகி (பிரதேச செயலாளர், போரதீவுப் பற்று)
உப தலைவர் : திரு.சி. புவனேந்திரன் (உதவி பிரதேச செயலாளர், போரதீவுப் பற்று)
செயலாளர் : திரு. ச.சோமசுந்தரம் (கலாசார உத்தியோகஸ்தர், போரதீவுப் பற்று)
பொருளாளர் : திரு. க.நாகேஸ்வரன் (கணக்காளர், போரதீவுப் பற்று)
உப செயலாளர்: திரு. ச.கணேசமூர்த்தி (அதிபர், மட்/பட்/வெல்லாவெளி கலைமகள் வித்.)
இணைச் செயலாளர் : திரு.எல்.ஆனந்தமோகன் (சமுர்த்தி முகாமையாளர்)

**உறுப்பினர்கள்:**

திரு.ச.சசிகுமார் (உதவித் திட்டமிடல் பணிப்பாளர்)
திரு.ரீ.உமாபதி (நிருவாக உத்தியோகஸ்தர்)
திரு.செ.தார்சன் (மேலதீக மாவட்டப் பதிவாளர்)
திரு.இ.சிவலிங்கம் (சமூக சேவை உத்தியோகஸ்தர்)
திரு.தெ.நடராசா (கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர்)
திரு.இ.கலைச்செல்வன் (அபிவிருத்தி இணைப்பாளர்)
திரு.க.தணிகாசலம் (கலாபூசணம், கிராமிய பல்துறைக் கலைஞர்)
திருமதி.பூமலர் சிவராசா (கலாபூசணம், கிராமிய பல்துறைக் கலைஞர்)
திரு.ம.சத்தியநாராயணன் (கிராம சேவை உத்தியோகஸ்தர்)
திரு.இ.விநாயகம் (கலாபூசணம், கிராமிய பல்துறைக் கலைஞர்)
திரு.க.சந்திரகுமார் (சமுர்த்தி முகாமையாளர்)
திரு.கோ.கணேஸ் (சமுர்த்தி உதவி முகாமையாளர்)
திரு.தி.திபாகரன் (திறன் அபிவிருத்தி உத்தியோகஸ்தர்)
திரு.எஸ்.குகதாசன் (கிராம சேவை உத்தியோகஸ்தர்)
திரு.த.சேரலாதன் (ஆசிரியர், பல்துறைக் கலைஞர்)
திரு.வே.சிவஜெயராசா (கலைஞர்)
திரு.மு.பேரின்பராசா (சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர்)
திரு.க.சுந்தரம்பிள்ளை (கலைஞர்)
திரு.த.ரமீஸ்குமார் (ஆசிரியர், பல்துறைக் கலைஞர்)
திருமதி.பு.ஜீவகுமார் (சமுர்த்தி தலைமையக முகாமையாளர்)
திரு.சா.வெள்ளைக்குட்டி (நாட்டுக்கூத்துக் கலைஞர்)
திரு.சா.பிரசாந்தன் (வர்த்தகர், கலைஞர்)
செல்வி.த.யசோதினி (கலைஞர்)
திரு.க.சோமசுந்தரம் (கலைஞர்)
திரு.செ.சதாசிவம் (பல்துறைக் கலைஞர்)
மு.அருந்தவமலர் (கிராம சேவை உத்தியோகஸ்தர்)
திரு.வ.வேதநாயகம் (அபிவிருத்தி உத்தியோகஸ்தர்)
திரு.செ.நவரெத்தினம் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தர்)
திரு.த.செந்தூரன் (அலுவலகப் பணியாளர்)
திரு.ந.ஆனந்தராஜா (சாரதி பணியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்க்குழு:

திரு.சி. புவனேந்திரன் (உதவி பிரதேச செயலாளர்)
திரு. ச.சோமசுந்தரம் (கலாசார உத்தியோகஸ்தர்)
திரு.ரீ.உமாபதி (நிருவாக உத்தியோகஸ்தர்)
திரு.இ.கலைச்செல்வன் (அபிவிருத்தி இணைப்பாளர்)
திரு.க.கணேசமூர்த்தி (அதிபர்)
திரு.மு.பேரின்பராசா (சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர்)
திரு.த.சேரலாதன் (ஆசிரியர்)
திரு.த.ரமீஸ்குமார் (ஆசிரியர்)
திருமதி.பூமலர் சிவராசா (கலாபூஷணம், பல்துறைக் கலைஞர்)
திரு.கோ.கணேஸ் (சமுர்த்தி உதவி முகாமையாளர்)
திரு.ம.சத்தியநாராயணன் (கிராம சேவை உத்தியோகஸ்தர்)
திருமதி.ப.மயூரவதனன் (கலாசார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்)
திருமதி.உ.விஜயபாகு (இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்)
திரு.கி.கிருபாகரன் (பட்டதாரிப் பயிலுனர்)
செல்வி.சீ.நிஜந்தா (பட்டதாரிப் பயிலுனர்)
செல்வி.பூ.காஞ்சனா (கணனிப்பயிலுனர்)

## நிகழ்ச்சிக்குழு:

திரு. ச.சோமசுந்தரம் (கலாசார உத்தியோகஸ்தர்)
திரு.க.தணிகாசலம் (கலாபூசணம், கிராமிய பல்துறைக் கலைஞர்)
திரு.எஸ்.குகதாசன் (கிராம சேவை உத்தியோகஸ்தர்)
திருமதி.பு.ஜீவகுமார் (சமுர்த்தி தலைமையக முகாமையாளர்)
திரு.மு.பேரின்பராசா (சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர்)
திரு.தி.திபாகரன் (திறன் அபிவிருத்தி உத்தியோகஸ்தர்)
திரு.இ.விநாயகம் (கலாபூசணம், கிராமிய பல்துறைக் கலைஞர்)
திரு.சு.உதயகுமார் (கலாசார பேரவை உறுப்பினர்)
திரு.இ.விநாயகம் (கலாசார பேரவை உறுப்பினர்)
திருமதி.ப.மயூரவதனன் (கலாசார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்)
திருமதி.உ.விஜயபாகு (இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்)

## நிதிக்குழு:

திரு. ச.சோமசுந்தரம் (கலாசார உத்தியோகஸ்தர்)
திரு.தெ.நடராசா (கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர்)
திரு.இ.கலைச்செல்வன் (அபிவிருத்தி இணைப்பாளர்)
திரு.ந.ஆனந்தராஜா (அலுவலக சாரதி )

விழா மேற்பார்வை : ஆர்.ராகுலநாயகி (பிரதேச செயலாளர்)
விழா இணைப்பாளர்கள்: திரு.சி.புவனேந்திரன் (உதவி பிரதேச செயலாளர்,)
திரு.ச.சோமசுந்தரம் (கலாசார உத்தியோகஸ்தர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்து மளந்திடு
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி யோங்க
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வான மளந்த தனைத்தும் அறிந்திடு
வளர்மொழி வாழியவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரதீவுப்பற்று பிரதேச கலாசார பேரவை உறுப்பினர்கள் (புகைப்பட விபரம்)

**இடமிருந்து வலமாக[இருப்பவர்கள்]**

1. திரு.இ.விநாயகம் (கலாபூஷணம்)
2. திருமதி.பூமலர் சிவராசா (கலாபூஷணம்)
3. திரு.ச.சோமசுந்தரம் (கலாசார உத்தியோகத்தர்)
4. திரு.வ.நாகேஸ்வரன் (கணக்காளர்)
5. ஆர்.ராகுலநாயகி (பிரதேச செயலாளர்)
6. திரு.சி.புவனேந்திரன் (உதவிப் பிரதேச செயலாளர்)
7. திரு.சி.சசிகுமார் (உதவி திட்டமிடல் பணிப்பாளர்)
8. திரு.தி.உமாபதி (நிருவாக உத்தியோகத்தர்)
9. திருமதி.பு.ஜீவகுமார் (தலைமை சமுர்த்தி முகாமையாளர்)
10. திரு.ஆ.மு.சி.வேலழகன் (கலாபூஷணம்)

**இடமிருந்து வலமாக [நிற்பவர்கள் - 01]**

1. செல்வன்.கி.கிருபாகரன் (பட்டதாரி பயிலுனர்)
2. திரு.மு.பேரின்பராசா (சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர்)
3. திரு.க.சுந்தரம்பிள்ளை (கலைஞர்)
4. திரு.வே.சிவஜெயராசா (கலைஞர்)
5. திரு.செ.தார்சன் (மேலதிக மாவட்ட பதிவாளர்)
6. திரு.த.செந்தூரன் (அலுவலக பணியாளர்)
7. திரு.ந.பிரதீபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)
8. திரு.இ.கலைச்செல்வன் (அபிவிருத்தி இணைப்பாளர்)
9. திரு.எஸ்.சத்தியநாராயணன் (கிராம உத்தியோகத்தர்)
10. திரு.கோ.கணேஷ் (சமுர்த்தி உதவி முகாமையாளர்)
11. திரு.சா.ஆனந்தமோகன் (சமுர்த்தி முகாமையாளர்)
12. திரு.தி.திவாகரன் (திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்)
13. திரு.வ.வேதநாயகம் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)
14. திரு.செ.சதாசிவம் (கலைஞர்)
15. திரு.எஸ்.குகதாசன் (கிராம உத்தியோகத்தர்)

**இடமிருந்து வலமாக [நிற்பவர்கள் - 02]**

1. திரு.க.தணிகாசலம் (கலாபூஷணம்)
2. திரு.செ.நவரெட்ணம் (சமுர்த்தி உத்தியோகத்தர்)
3. திரு.ந.ஆனந்தராசா (அலுவலக சாரதி)
4. செல்வி.த.யசோதினி (கலைஞர்)
5. திரு.தெ.நடராஜா (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)
6. திரு.க.சோமசுந்தரம் (கலைஞர்)
7. திருமதி.பக்தகௌரி மயூரவதனன் (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்)
8. செல்வி.சீ.நிஜந்தா (பட்டதாரி பயிலுனர்)
9. திருமதி.மு.அருந்தவமலர் (கிராம உத்தியோகத்தர்)
10. திருமதி.உதயமலர் விஜயபாகு (இந்துகலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்)
11. செல்வன்.பா.மோகனதாஸ் (பட்டதாரி பயிலுனர்)
12. திரு.த.சேரலாதன் (ஆசிரியர்)
13. திரு.த.ரமீஸ்குமார் (ஆசிரியர்)
14. திரு.ச.கணேசமூர்த்தி (அதிபர்)
15. திரு.இ.சிவலிங்கம் (சமூக சேவை உத்தியோகத்தர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# போரதீவுப்பற்று பிரதேசத்தின் பண்டைய உணவு முறைகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிழக்குப் பகுதி எழுவான் கரையென்றும் மேற்குப்பகுதி படுவான் கரையென்றும் முன்னோர்களால் அழைக்கப்பட்டு வந்துள்ளது. கிழக்குப் பகுதியில் சூரியன் உதிப்பதால் எழுவான் என்பதும் மேற்கில் சூரியன் மறைவதால் படுவான் என்பதும் அவர்களது கருத்தாகும். போரதீவுப்பற்று பிரதேசமும் மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளதால் படுவான்கரைக்குள் அடங்குகின்றது.

மண்டூர், பாலமுனை, தம்பலவத்தை, கணேசபுரம், சங்கர்புரம், 16ம் கிராமம், சின்னவத்தை, காக்காச்சிவட்டை, வெல்லாவெளி, கோயில் போரதீவு, பெரியபோரதீவு, பழுகாமம், தும்பங்கேணி, திக்கோடை, 37ம், 38ம், 39ம் கிராமங்களும் இன்னும் பல கிராமங்களும் இப் பிரதேசத்திற்குள் வருகின்றன. போரதீவுப்பற்றுப் பிரதேசம் குறிப்பாக வயலும் வயல் சார்ந்த மருத நிலமுமாகும். சிற்றூர்களும் ஓடைகளும் பெரிய நிழல் மரங்களும் சிறிய காடுகளுமாக இயற்கை எழில் நிறைந்த பகுதியாக காணப்படுகின்றது.

முன்னர் இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்டிருந்தார்கள். மீன்பிடி போன்றவற்றில் ஈடுபட்டிருந்தாலும் அவை சிறிய முயற்சிகளே.

இப் பிரதேசத்தில் வாழ்ந்த முன்னோர்கள் காடுகளை அழித்து சேனைச் செய்கைகளில் ஈடுபட்டு சோளன், குரக்கன், இறுங்கு, தினை, உழுந்து, பாசிப்பயறு, கௌப்பீ போன்ற தானியங்களையும் மரவள்ளி, வற்றாளை, வள்ளி போன்ற கிழங்கு வகைகளையும் பூசணி, கெக்கரி, நாடை, அவரை போன்ற பயிர்களையும் உற்பத்தி செய்தார்கள். நெல் உற்பத்தி இடம்பெற்றிருந்தாலும் கூடுதலாக இடம் பெறவில்லை. காரணம் நெல்லுற்பத்திக்கு ஏற்றதாக காணிகள் திருத்தப்படாமல் இருந்தமையே ஆகும். நாளடைவில் காணிகள் திருத்தப்பட்டு தற்போது நெற்செய்கை கூடுதலாக இடம் பெறுகிறது. சேனைச் செய்கை முன்னரை விட குறைவடைந்துள்ளது.



கலாபூஷணம் இலக்கியமணி திருமதி. மலர் சிவராசா (மண்டூர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானியங்கள், கிழங்குகள், இலைக்கறிகள், பழங்கள், குளத்திலுள்ள சிறிய மீன்கள் போன்றவற்றை கூடுதலாக உணவுக்கு பயன்படுத்தியதால் அக்காலத்து மக்கள் தேக ஆரோக்கியம் உள்ளவர்களாகவும், பலசாலிகளாகவும் இருந்திருக்கிறார்கள். உழவுதல், கொத்துதல், பாரந் தூக்குதல், மரந்தறித்தல் போன்றவற்றிலெல்லாம் திறமைசாலிகளாகவும் இருந்திருக்கிறார்கள். பெண்களும் கூட நெல் குற்றுதல், மா இடித்தல், எண்ணை தயாரித்தல் போன்ற வேலைகளைக்கூட களைப்பில்லாமல் செய்திருக்கிறார்கள்.

## இப்பகுதியில் வாழ்ந்த முன்னோர்களின் உணவுகளைப் பற்றி ஆராய்ந்து பார்ப்போம்

### 1. காலையுணவு:

அ. தண்ணிச்சோறு

இரவில் மண் பானையில் சோறு சமைத்து இரவுக்கு பயன்படுத்தியது போக மிகுதிக்குள் நீர் ஊற்றி வைத்திருந்து காலையில் அதை வடித்து தேங்காய்ப்பால், உப்பு, எலுமிச்சம்பழம் விருப்பமுள்ளவர்கள் சீனியும் சேர்த்து பிசைந்து சாப்பிடுதல். தண்ணிச்சோற்றுடன் தயிர், உப்பு, சீனி அல்லது வாழைப்பழம் ஆகியவற்றை சேர்த்து பிசைந்து சாப்பிடுதல்.

தண்ணிச்சோற்றுடன் இரவில் சமைத்த மரவள்ளி கிழங்குக்கறி, மாசி அல்லது கருவாட்டுக் குழம்பு ஆகியவற்றை சூடாக்கி சோற்றுடன் சேர்த்து சாப்பிடுதல். தண்ணிச்சோற்றுடன் பனம்பழப்பாணியும் சேர்த்துச் சாப்பிடுதல். பனம்பழத்தை அடுப்பிற்குப் பக்கத்தில் வைத்து சுட்டு அதன் தோலை உரித்து விட்டு பாணி பிழிந்து தும்பை அகற்றிவிட்டு சோற்றுடன் சேர்த்து சாப்பிடுதல். இன்னொரு முறை பனம்பழப்பாணியை எடுத்து மண் பானையில் வைத்து அடுப்பில் வைத்து காய்ச்சி இறக்கி ஆறவிட்டு பானையின் வாயை மூடி வைத்து அடுத்த நாள் காலையில் தண்ணிச்சோற்றுடன் சிறிது தேங்காய்ப்பாலும் சிறிது பனம்பழப்பாணியும் உப்பும் சேர்த்து பிசைந்து சாப்பிடுதல். இந்தப்பாணி ஜேம் போல் இருக்கும். காய்ச்சிய பாணியை மூடி வைத்தால் 2 தொடக்கம் 3 நாட்களுக்கு பழுதடையாமல் இருக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. கூழ்வகை

குரக்கன் மா, உழுந்து மா ஆகியவற்றில் தேங்காய்ப்பால் சேர்த்துக் கரைத்து அடுப்பில் வைத்து காய்ச்சி சிறிது சீனியும் சேர்த்து இறக்கி ஆறியதும் சாப்பிடுதல்.

இ. கழிவகை

உழுந்து மா, குரக்கன் மாவில் செய்யப்படும். உழுந்து மாவை தேங்காய்ப்பாலில் கரைத்து அடுப்பில் வைத்துக் காய்ச்சி இறக்க முன்பு சீனியும் சேர்த்துக் காய்ச்சி எடுத்தல். குரக்கன் மாவில் தயாரிக்கும் போது அடுப்பில் வாயகன்ற சட்டியின் அளவுக்கு நீர் வைத்து கொதிக்கும் போது மாவை சிறிது சிறிதாகச் சேர்த்து கிண்டியெடுத்தல்.

குரக்கன்மாக்கழியுடன் சிறிய மீன்குழம்பு அல்லது சொதி வைத்து அதில் தோய்த்துச் சாப்பிடுதல்.

கழியென்பது இறுக்கமாகவிருக்கும். கூழ் நுகைவாகவிருக்கும்.

ஈ. பிட்டு வகை

அரிசி மா, குரக்கன் மா, சோளம் மாவில் பிட்டு தயாரித்து தயிர், வாழைப்பழம், சீனி சேர்த்து சாப்பிடுதல். மாம்பழமும் சேர்க்கப்படும். சீனி பழங்களுக்குப் பதிலாக தேன் சிறிது சேர்த்துச் சாப்பிடுவதுமுண்டு. பிட்டுடன் ஏதாவது கறி வகை, சம்பல், கருவாட்டுச் சுண்டல் சேர்த்துச் சாப்பிடுதல்.

கோதுமை மாவிலும் பிட்டுச் செய்யப்படும். கோதுமை மா அந்நேரம் கூப்பனுக்குக் கொடுப்பதால் கூப்பன் மா என்றும் அழைப்பர்.

உ. ரொட்டி வகை

அரிசி மா, குரக்கன் மா, கோதுமை மா என்பவற்றில் தேங்காய்ப்பூ, உப்பு சேர்த்துக் குழைத்து ரொட்டி செய்து சாப்பிடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ. கஞ்சி வகை

அரிசிக் குருனலை எடுத்து தேங்காய்ப்பால் அடுப்பில் வைத்து அது கொதிக்கும் போது முள்நீக்கி கழுவி அரிந்த தூதுவளை அல்லது முள்முருக்கம் இலையை தட்டிப் பிழிந்து எடுத்த சாறு ஆகியவற்றின் ஒன்றை சேர்த்து உப்பு விட்டுக் காய்ச்சியெடுத்தல். இருமல், சளி பிடித்துள்ள நாட்களில் இது காலையுணவாகப் பயன்படுத்தல். இந்த இலைக்கு சளியை போக்கும் தன்மையுண்டு.

எ. குருனல் சோறு

இடிந்த அரிசியின் அடிப்பகுதியை எடுத்து விட்டு மற்றைய பகுதியை அளவாக நீர் விட்டு சோறு சமைத்து திராய்ச் சுண்டல், கத்தரிக்காய், பாகற்காய், மரவள்ளிக் கிழங்கு ஆகியவற்றை பொறித்துச் சாப்பிடுதல். கருவாடும் சிலர் பொறித்துச் சாப்பிடுவர்.

ஏ. பால் அப்பம்

அரிசி மாவை எடுத்து இரவில் இறுக்கமாக குழைத்து வைத்திருந்து காலையில் தளர்ந்த கரைசலாக்கி உப்பு அளவாகச் சேர்த்தல்.

தேங்காப்பாலில் முதல் பாலை வேறாக்கி விட்டு மற்றைய பாலை மாக்குழையலுக்குள் விட்டு தடித்த கரைசல் தயாரிக்கப்படும். வழுப்பான மண் சட்டியை அடுப்பில் வைத்து சூடேறிய பின் எண்ணையை தோய்த்த சீலையால் சட்டியின் அடிப்பாகத்தை துடைத்து மாக்கரைசலை ஊற்றி வட்டமாக்கி அதற்கு மேல் சிறிது முதற் பாலை ஊற்றுதல். அப்பச் சட்டிக்கு மேல் இன்னுமொரு சட்டி நெருப்புத் தணலைப் பற்ற வைத்து மூடுதல். மேல் கீழ் பக்கங்களில் சூடு படுவதால் அப்பம் வெந்து விடும். இறக்கி எடுத்தல். (இது அக்காலத்து முறை) இது காலையுணவிற்கு பயன்படுத்தப்படும். வசதி குறைந்த பெண்கள் வியாபார ரீதியாகச் செய்வர். இரவில் சூடு மிதித்து காலையில் களவெட்டிக்குள் அப்பம் அனுப்பி வைக்கப்டும். அனுப்பி வைக்கப்பட்ட அப்பத்திற்கு கூலியாக நெல் வழங்கப்படும். பால் அப்பத்தை வாழைப்பழத்துடன் சேர்த்து சாப்பிடுவர்.

கர்ப்பமாகவிருக்கும் பெண்களுக்கு பால் அப்பமும் வாழைப்பழமும் உறவினர்களால் அனுப்பி வைக்கப்படுவதுண்டு. இந்தப் பால் அப்பத்தை அதிகமாகச் சாப்பிட்டால் ஜீரணமடையாது மந்தமாகவிருக்கும்.

ஒ. கிழங்கு வகைகளை அவித்து உண்ணுதல்

**மரவள்ளிக் கிழங்கை அவித்தல்**

இளம் கீரையை, இளம் பூசணி இலையை, குமுட்டி போன்ற இலைகளை அவித்துக் கடைந்து கிழங்குடன் சேர்த்துச் சாப்பிடுதல். (சர்க்கரைப் பூசணி -சுரையிலை) அளவான நீருக்குள் பச்சை மிளகாய் (சிறிய துண்டாக்கியது) எலுமிச்சம்புளி, உப்பு ஆகியவற்றை விட்டுக் கலத்தல். அந்தக் கலவையில் கிழங்குத் துண்டுகளைத் தோய்த்துச் சாப்பிடுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ. மரவள்ளிக் கிழங்குக் கூழ்

மரவள்ளிக் கிழங்கை சீவல்களாக்கி, நீர் விட்டு அடுப்பில் வைத்து கிழங்கு அவிந்து வரும் போது நன்கு மசித்து அதற்குள் தேங்காய்ப்பால், சீனி ஆகியவற்றைச் சேர்த்துக் காய்ச்சுதல். சிலர் தேங்காய்ப்பாலுக்குப் பதிலாக பசுப்பாலும் சேர்ப்பர். இறுகியதும் இறக்கி ஆறவிட்டு சாப்பிடுதல். இதை சாப்பிட்டால் இலகுவில் பசிக்காது.

வற்றாளைக் கிழங்கு, வள்ளிக் கிழங்கு, ஆகியவற்றை அவித்துச் சாப்பிடுதல். பாசிப்பயறு, கௌப்பி போன்றவற்றை சிறிது உப்பு சேர்த்து அவித்துச் சாப்பிடுவர். சிலர் அவித்த பாசிப்பயறு, கௌப்பி, தேங்காய்ப்பூ, சீனி ஆகியவற்றுடன் சேர்த்து சுத்தமான உரலில் இட்டு துவைத்து உருண்டைகளாக்கி சாப்பிடுவர்.

**சோளத்தை உணவுக்கு பயன்படுத்திய முறை**

அக்காலத்தில் சோளம் சேனைகளில் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டது. இதனால் அக்காலத்து மக்கள் இதனை கூடுதலாக உணவாகப் பயன்படுத்தினர். இளம் குலைகளை உப்பிட்டு அவித்து உண்ணுதல், நெருப்புத் தழலில் வைத்து சுட்டுச் சாப்பிடுதல்.

முற்றிய விதைகளை கோது நீக்கி இடித்து மாவாக்கி பிட்டு அவித்து ஏதும் கறியுடன் சாப்பிடுதல்.

முற்றிய விதைகளை வறுத்து உண்ணுதல்.

முற்றிய விதைகளை வறுத்து இடித்து மாவாக்கி தேங்காய்ப்பூ, சீனி சேர்த்து சிறிது நீர் விட்டு பிசைந்து உருண்டைகளாக்கி சாப்பிடுதல்.

வசதி குறைந்தவர்கள் மரவள்ளி, சோளம் ஆகியவற்றை 3 நேர உணவாகவும் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதை அறிய முடிகிறது.

நிலக்கடலை முற்றியதும் உலர விடாமல் அவித்து கோதுடைத்து விதைகளைப் பிரித்து சாப்பிடுதல்.

## இப்பகுதி முன்னோர்களால் உண்ணப்பட்ட சிற்றுண்டி வகைகள்.

அ. கொழுக்கட்டை

அரிசி மாவை (புதிதாக இடித்த) நீராவியில் அவித்து இறக்கி அதற்குள் உப்பு, நீர் அளவாக விட்டு கொதிநீர் விட்டு குழைத்து தேங்காய்ப்பூ, பாசிப்பயறு, சீனி அல்லது சர்க்கரை சேர்த்து கலவை செய்து மாக்கலவை மென்மையாகும் வரை குழைத்து உருண்டைகளாக்கி பின்னர் அவற்றை கிண்ணம் போல் செய்து அதற்குள் சீனிக் கலவை அளவாக வைத்து மடித்து நீளமாக்கி பல்லுகள் போல் விரலால் பிடித்து நீராவியில் வைத்து அவித்து எடுத்தல். வறுத்த மாவிலும் செய்யலாம். தடிப்பாகயிருக்கும், இரவில் விறைத்து விடும். நீராவியில் அவித்த மாவில் செய்யும் கொழுக்கட்டை மென்மையாகவிருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழுக்கட்டையின் பயன்பாடுகள் :

பல்லுக் கொழுக்கட்டை சொரிதல்

குழந்தை பிறந்து முதல் பற்கள் வெளி வரும் போது இந்நிகழ்வு இடம்பெறும். சுவாமியறையைக் கழுவி, நிறைகுடம் வைத்து, குத்து விளக்கேற்றி, குழந்தையை நீராட்டி, சுவாமியறையில் வெள்ளைச் சீலை விரித்து, புத்தாடை அணிவித்து குழந்தையை அதில் இருத்தி சிறிய கொழுக்கட்டைகளாகச் செய்து தாய், தந்தை, மாமன், மாமி ஆகியோர் குழந்தையின் தலை மீது மெதுவாகப் போடுவர். குழந்தை அதை எடுத்து வாயில் வைத்து கடித்து சாப்பிடும் பழக்கத்தை தூண்டுவதாக இதைக் கருதலாம். பெற்றோர், உறவினர் இதைப் பார்த்து மகிழ்வர்.

தெய்வ பூசைகளின் போது இதை வைத்து வணங்குவர். குறிப்பாக விநாயக பெருமானின் பூசையில் கொழுக்கட்டை, மோதகம் வைக்கப்படும். மோதகம் என்பது கொழுக்கட்டையின் செய்கைதான். உருவ அமைப்பு வட்டமாகயிருக்கும்.

கர்ப்பிணிப் பெண்கள் சில சிற்றூண்டிகளை விரும்பி உண்பர். அவர்களுக்கு கொழுக்கட்டை, கப்பல் வாழைப்பழம் ஆகியவற்றை உறவினர்கள் கொண்டு போய் கொடுப்பர்.

மாப்பிள்ளைக் கொழுக்கட்டை:

திருமணம் நிச்சயமானதும் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டுக்கும் உறவினர்கள் சிலரைக் கூட்டிக் கொண்டு பட்சணங்களுடன் சென்று அவர்களுடன் கலந்துரையாடி திருமணத்தை நிச்சயப்படுத்திக் கொள்வர். பெண் வீட்டாருக்கு அங்கு விருந்து கொடுக்கப்படும்.

மாப்பிள்ளை வீட்டுக்கு கொண்டு போகும் பட்சணங்களாக சீனிப் பலகாரம், கொழுக்கட்டை, முறுக்கு, பயற்றம் உருண்டை, வாழைப்பழம் ஆகியவை செய்யப்படும். சீனிப் பலகாரம், கொழுக்கட்டை எல்லாம் பெரிய உருவத்தில் செய்யப்படும். கொழுக்கட்டை ஒன்றைப் பெரிதாக செய்து கலவைக்குள் மாப்பிள்ளைக்கு அளவான தங்க மோதிரம் ஒன்று வைத்து அவிக்கப்படும். மற்ற கொழுக்கட்டைகளை விட பெரிதாகயிருப்பதால் "மாப்பிள்ளைக் கொழுக்கட்டை" என அழைக்கப்படும். இந்த மோதிரத்தை மாப்பிள்ளை எடுத்துக் கொள்வார்.

ஆ). முறுக்கு :

வறுத்த அரிசி மாவில் அளவாக உப்பு சேர்த்து கொதித்த தேங்காய்ப்பாலை விட்டு குழைத்து முறுக்கு உரலிலிட்டு பிழிந்து கொதிக்கும் எண்ணையில் பொரித்தெடுத்தல்.

இ). தோய்ப்பான் :

வறுத்த அரிசி மாவை தடித்த கரைசலாக்கி அளவாக உப்பிட்டு (இதற்கு அச்சொன்று உள்ளது) தோய்ப்பான் அச்சை கொதிக்கும் எண்ணையினுள் சூடாக்கி எடுத்து மாக்கரைசலில் தோய்த்து மீண்டும் எண்ணைக்குள் வைத்து கொள்ளும் போது அது பொரிந்து கழரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகிர்ந்துண்ணும் பழக்கம்

தங்கள் வீடுகளில் விசேட வைபவம் நடக்கும் போது சிற்றுண்டிகள் சோறு, கறி ஆகியவற்றை உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் பகிர்ந்து கொடுப்பர். கர்ப்பிணிப் பெண்களுக்கும் வயோதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும். சித்திரை வருடப் பிறப்பு, தைப்பொங்கல் போன்ற விசேட தினங்களில் பட்சணங்கள், பொங்கல் ஆகியன அனுப்பி வைக்கப்படும்.

## புதிது உண்ணல் (புதிருண்ணல்)

நெல் வயல்களில் கதிர்கள் முதிர்ச்சியடைந்து அறுவடை செய்து நல்ல நாளில் பொங்கல் செய்து அல்லது சோறு சமைத்து மரக்கறி, பால், தயிர் ஆகியவற்றோடு வாழைப்பழமும் பரிமாறப்படும்.

அண்ணன், தம்பி அயலவர்கள் எல்லோரையும் வரவழைத்து எல்லோரும் சேர்ந்து சாப்பிடுவர். இதேபோல் வயல்களில் நெற்கதிர்கள் முன்னர் பின்னராக முதிர்ச்சியடையும். முன்னர் அறுவடை செய்பவர்கள் பின்னர் அறுவடை செய்ய இருப்பவர்களுக்கு புதிர் உண்பதற்கு நெல் கொடுப்பார்கள்.

நெல் அறுவடை நடக்கும் காலங்களில் வசதியற்ற குடும்பத்து பெண்கள், பிள்ளைகள், கதிர் பொறுக்குவதற்கு வயல்களுக்குச் செல்வார்கள். அப்போது அவர்களுக்கு கதிர்க்கற்றைகளை பிரித்து ஒவ்வொருவருக்கும் கொடுப்பார்கள். இதேபோல் சூடு மிதித்து நெல் தூற்றும் போது வசதியற்றவர்கள் களவட்டிக்குச் செல்வார்கள். அப்போதும் அங்கு நெல் பகிர்ந்து கொடுக்கப்படும்.

அந்நேரம் சேனைப் பயிர்ச் செய்கைக்கு சென்ற ஆண்கள் 2-3 கிழமைக்குப் பின்னர் வரும் போது அங்கு உற்பத்தி செய்யப்பட்ட சோளம், குரக்கன், பாசிப்பயறு, பூசணிக்காய், மரவள்ளிக்கிழங்கு, தயிர் போன்ற பொருட்களையெல்லாம் கொண்டு வருவர். இதில் சிலவற்றை அயலவர்க்கும் உறவினர்களுக்கும் பகிர்ந்துகொடுப்பர்.

அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் தெய்வ நம்பிக்கை உள்ளவர்களாகவும் இருந்திருக்கின்றார்கள். தங்கள் ஒவ்வொரு பயிர்செய்கை நடவடிக்கையின்போதும் பொங்கலிட்டு பூசை செய்திருக்கின்றார்கள். ஆரம்ப உழவின்போது ஏர்நாள் பொங்கல், கதிர்களை முதலில் கண்டதும் கதிர் கண்ட பொங்கல் என பல்வேறு பொங்கலும் பூசைகளும் இடம்பெற்று பொங்கல்கள் மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்படும். இலைக்கறிகள், பழங்கள் போன்றவற்றை அதிகமாக உணவில் சேர்த்துக் கொண்டதால் ஆரோக்கியமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்திருக்கின்றார்கள்.

கால ஓட்டத்தில் இப்பகுதியில் வாழும் தற்போதைய மக்கள் தங்கள் பாரம்பரியங்களிலிருந்து மெதுவாக விடுபட்டு மேலைத்தேச நாகரிகங்களிலும் அந்நாட்டு உணவு வகைகளிலும் விருப்பம் கொண்டு அவற்றைப் பயன்படுத்தி வருகிறார்கள். தங்கள் வீடுகளில் நடக்கும் விசேட வைபவங்களுக்கு கூட கேக்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐஸ்கிறீம், புரியாணி, பார்டம்ஸ் பொரியல் போன்ற உணவுகளை முகவர்கள் ஊடாக பெற்று பரிமாறுகிறார்கள். இவற்றை சாப்பிட்ட பலருக்கு ஒவ்வாமையினால் வாந்தி, வயிற்றோட்டம் போன்ற நோய்களுக்கு இலக்காகி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட வரலாறுகளும் உண்டு.

இப்போது காய்கறிகளையும், பழங்களையும் சமைத்த உணவுகளையும் குளிரூட்டியில்(பிறிச்) அதிக நேரம் வைத்து பாவிப்பதனால் அவற்றில் இரசாயன மாற்றங்கள் ஏற்பட்டு நோய்கள் ஏற்படக் கூடிய வாய்ப்பும் உருவாகிறது. முன்னோர்கள் கத்தரிக்காய் மிகுதியாக இருக்கும் போது கிணற்றுக்குள் போடுவார்கள். அது ஆழத்துக்குப் போகாது நீருக்குள் மிதக்கும். தேவைப்படும்போது எடுத்தால் வாடாமல் புதிதாகவே காணப்படும். அதே போல் தயிர் மிஞ்சும்போது அதை ஐதான பருத்திச் சீலையில் வைத்து முடிந்து உயரத்தில் கட்டி தொங்கவிடுவார்கள். முடிச்சிக்கு கீழ் ஒரு பாத்திரம் வைக்கப்படும். அதில் தயிர் உள்ள நீர் வடியும். நீர் வடிந்த பின் தயிர் இறுக்கமாகிவிடும். இப்படி இயற்கை முறைகளைக்கொண்டு உணவுகளைப் பாதுகாத்தார்கள். அதனால் உணவுகள் இரசாயனத் தாக்கங்களுக்கு உள்ளாகவில்லை.

முன்னோர்கள் சமயலுக்கு மண் பாத்திரங்களேயே பயன்படுத்தியுள்ளார்கள். தற்போது அலுமினியப் பாத்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் சமையல் செய்வதால் சமைக்கும் உணவுகளில் நச்சுத்தன்மை ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. இக்காலத்துப் பெண்கள் இலைக்கறிகளைத் துப்பரவு செய்து சமைப்பதற்கு சோம்பல்பட்டு அவற்றைச் சமைப்பதயே தவிர்த்து விடுகிறார்கள். சந்தைகளில் வியாபாரிகள் பழங்கள் விரைவாகப் பழுக்கவும் பழுதடையாமல் இருக்கவும் இரசாயனங்களைத் தெளிக்கிறார்கள். இவற்றைப் பயன்படுத்தும் நுகர்வோர் பலவித நோய்களுக்கு ஆளாகி வைத்தியர்களிடமும், மருந்துக் கடைகளிலும் வரிசையில் நிற்கவேண்டியுள்ளது.

மா,பலா, வாழை, பப்பாசி, தோடை, எலுமிச்சை போன்ற பழ மரங்களையும், மரக்கறிகளையும் நமது தோட்டத்திலே உற்பத்தி செய்தால் நச்சுத்தன்மையற்ற காய்கறிகளும், பழங்களும் நமக்குக் கிடைக்கும். அவை புதிதாகவும் இருக்கும். பண்டைய மக்கள் சத்தான உணவுகளை நாளாந்தம் சேர்த்துக்கொண்டதுடன் உடல் அப்பியாசம் உள்ள வேலைகளையும் செய்தார்கள். இதனால் அவர்கள் உடல் ஆரோக்கியத்துடன் நீண்ட நாட்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

இக்காலச் சந்ததியினராகிய நாமும் செயற்கை உணவுகளுக்கு அடிமையாகாமல் நச்சுத் தன்மையற்ற கலப்படமற்ற உணவுகளை பயன்படுத்தி உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாப்போம்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான்மதி வாசிகசாலை

வெண்பா

ஆசிகளனைத்தும் மீந்து அறிவினையூட்டும்
மாட மாளிகை புத்தகங்கள் வாழ்ந்திடும்
அறிவுச் சோலை- வாசிக சாலை
பூசித்து வாழ்வோம் அறி!

வேறு

புன்னகை பூக்கும் கூடம்
புதிர்களை அறிவுத் தேடல்
நலன்தரும் ஒன்று கூடல்
மூளைக்கு விருந்து அளித்து
முழுமதி கொடுக்கும் தேறல்
வான்மதி வாசிக சாலை
வற்றாத அறிவு ஊற்றே

தேன்மரம் தேடிக்கண்டு
ரீங்காரம் இசைக்கும் வண்டு
பொன்மலர் அமர்ந்த வண்ணம்
பூத்தேனை அருந்தல் போல
அறிவினைத் தேடும் மாந்தர்க்
களித்திடும் அமுதசுரபி
வான்மதி வாசிகசாலை
வற்றாத அறிவூற்றன்றோ

பெருங்கொடை கல்விச் செல்வம்
பேரறிவூட்டும் என்றும்
நறுங்கொடை மாந்தர்க்கெல்லாம்
நற்றவம் அறிவு அன்றோ
அறிவினை தேடும் அரங்கம்
அமைதியின் அரங்கம்
அமைதியின் தியாகதீபம்
வான்மதி வாசிகசாலை
வற்றாத அறிவூற்றன்றோ!

**திரு. க. சசிதானந்தம்** (கோவில்போரதீவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடாதே மனிதா எங்கும்
உணர்வினை அடக்கி யாளு
வாடாதே நீ! அறிவிழந்து
வளங்கள் உனை வளைத்து உண்டு
தேடு நீ முதலில் அறிவைத்
திரவியம் தேடிவரும்
ஓடுநீ வாசிகசாலை உந்தன்
உள்ளத்தை அமைதியாக்கும்

அறிவாயுதம் என்றும் உந்தன்
ஆபத்தைக் காத்து நிற்கும்
அறிவாயுதம் என்றும் உந்தன்
அன்பினை வளர்த்து நிற்கும்
அறிவாயுதம் என்றும் உந்தன்
அழகு உடல்தனை வளர்க்கும்
ஆன்மாவை நெறிப் படுத்தும்
அறிவாயுதம் வாசிகசாலை யன்றோ!

மனிதம் வளர்க்கும் வாசிகசாலை
மனசுக்கு அமைதிதரும் வாசிகசாலை
புனிதம் புரியவைக்கும் வாசிகசாலை
புண்ணிய நெறிகாட்டும் வாசிகசாலை
கணிதம் விஞ்ஞானம் இலக்கியம்
கன்னித் தமிழ் தரும் வாசிகசாலை
துணிவுடனே அறங்கள் ஊட்டும்
தூயவான்மதி வாசிகசாலையன்றோ!

காலமாற்றங்கள் களைகட்டுகிறது!
காளையர் கன்னியரைக் கவனத்திசை மாற்றுகிறது !
கையடக்கத் தொலைபேசி இன்று
கன விளையாட்டுக்கள் காட்டுகிறது!
பையவே இவர் அறிவையெல்லாம் !
பள்ளத்தில் தள்ளி விடுகின்றது !
ஐயையோ வாசிகசாலைகளோ!
அழுகிறது! ஆற்றாமலே சிரிக்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாசிகசாலைகளை வற்றிவிட்டுப் பார்க்காதீர்!
வாசிகசாலைகளை வளமிழக்கப் பண்ணாதீர்!
இளையசமூகமே எங்கள் இனிய உறவுகளே!
முளைவிட்டு வளரும் அறிவை முறித்து விடாதீர்கள்
தளைவிட்டு வளர்ந்து அறிவைத்
தலவிருட்சமாக்கும் வாசிகசாலை!
இளையசமூகமே ஓடு அங்கே !
இருள் அகற்றி அறிவு ஒளி தரும் "வாசிகசாலை"!

"வெண்பா"

பூரண மனிதனாக்கும் புகழ்தந்து வளம் காக்கும்
காரண காரியங்கள் கைகூடத்துணை நிற்கும் தோரணமாய்
வாசிகசாலை அறிவு வயோதிபம் வரை அமைதிதரும்
தூசிகளகற்றி வாழ்வில் தூய்மையும் தருமன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரதீவுப்பற்று பிரதேச பாரம்பரிய விளையாட்டுக்கள்

கிழக்குமாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவு அமைந்துள்ளது. அங்கே பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதிவரை பெரியோர்களாலும் இளைஞர்களாலும் யுவதிகளாலும் மற்றும் சிறுவர் சிறுமிகளாலும் அனேக விளையாட்டுக்கள் விளையாடப்பட்டு வந்தன. தற்காலத்தில் வெளிநாட்டு விளையாட்டுகளிலே இங்குள்ளவர்கள் மோகம் கொண்டமை காரணமாக எமது பாரம்பரிய விளையாட்டுக்கள் அருகி விட்டன. இருந்தாலும் இன்னும் சில விளையாட்டுக்கள் இங்கு நடைபெறும் விளையாட்டு போட்டி விழாக்களிலும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றன. இருந்தாலும் தற்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் முதியவர்கள் மூலம் நாம் அவ்விளையாட்டுக்களின் அருமை பெருமைகளை அறியக்கூடியதாக உள்ளமை பெருமைக்குரியதாகும்.

அந்த நாட்களில் கொம்புமுறி எனும் ஒரு விளையாட்டு ஆலயங்களிலேயே விளையாடப்பட்டுவந்துள்ளது. அவ் விளையாட்டு அருகிவிட்டது. இதே போன்று மனிதனின் ஆற்றலையும் அறிவையும் வளர்க்ககூடிய விளையாட்டுக்களை நாம் மதிக்காது மறந்து வாழ்ந்து வருகின்றமை மனவேதனையாகும். இந்த வகையில் எம்மால் மறக்கப்பட்ட அந்த விளையாட்டுக்களை மீட்டுப் பார்த்தல் எமது மனங்களுக்கும் ஓரளவாவது நிம்மதியை தருமல்லவா?

எம்மால் மறக்கப்பட்டு அருகிப்போன விளையாட்டுக்களாவன:

1. கிட்டியடித்தல்
2. ஊஞ்சல் ஆடிப்பாடல்
3. சங்கு விளையாட்டு
4. கொத்து விளையாட்டு
5. ஆலா பற பற
6. எவடம் எவடம் புங்கம் புளியடி
7. ஏண்டி குட்டி என்னடி குட்டி
8. எட்டும் எட்டும் பதினாறு

முதலிய விளையாட்டுக்கள் பாடல்களைப்பாடி ஆடும் ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் கலந்த விளையாட்டுக்களாக இவற்றை எம்மூதாதையர்கள் பாடி, ஆடி காட்டுவதைப்பார்க்கும்போது எமது மனதுக்கும் எவ்வளவு மகிழ்ச்சியும் ஆனந்தமுமாய் இருக்கும் என்பதை தான் அனுபவித்தால்தான் புரிந்து கொள்ளமுடியும்.



எஸ். ஆனந்தமோகன் J.P (சமூர்த்தி முகாமையாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து நாம் காணவிருப்பது பலர் இரு பகுதிகளாகப்பிரிந்து விளையாடும் விளையாட்டுக்களாகும். அவையாவன:

1. வார் விளையாட்டு
2. கூழ் விளையாட்டு
3. கூடி விளையாட்டு
4. பிள்ளையார்கட்டை விளையாட்டு
5. கிளித்தட்டு விளையாட்டு
6. நாயும் இறைச்சியும் விளையாட்டு
7. சக்கரமாற்றல் விளையாட்டு
8. மாங்கொட்டை ஒற்றுதல்
9. பசுவும் கன்றும் விளையாட்டு
10. கப்பல்கோடு விளையாட்டு
11. தெத்திக்கோடு விளையாட்டு
12. ஒளித்துப்பிடித்தல் விளையாட்டு
13. கொத்தொழிக்கம் விளையாட்டு
14. ஊருக்குள் கரடி வருதல்
15. அடியடி நுளம்படி விளையாட்டு
16. ஈர்க்கிலை ஒளிக்கும் விளையாட்டு
17. நண்டூருது நரியூருது விளையாட்டு
18. ரயில் விளையாட்டு
19. பாட்டன்குத்து விளையாட்டு
20. பாலும் சோறும் விளையாட்டு
21. நொண்டியடித்தல் விளையாட்டு

மேற்படி விளையாட்டுகளுக்கு நடுவர்கள் எவரும்கிடையாது. அவர்களே ஒற்றுமை யாக விளையாடி தங்கள் வெற்றி தோல்விகளை பகிர்ந்து கொண்டு சந்தோசிப்பார்கள். இந்த விளையாட்டுக் களிலே எவருக்கும் உடல் உபாதை களோ, உயிராபத்துக்களோ ஏற்பட எதுவித வாய்ப்புக்களுமில்லை.

ஈண்டும் நாம் நோக்க இருப்பது "பழமொழி பொய்த்தால் பழஞ்சோறும் புளிக்கும்" எனும் வாக்கிற்கிணங்க நம்மால் விளையாடப்பட்ட பழமொழி யுடன் கூடிய விளையாட்டுக்களாகும். இதனை குறுகிய காலத்துக்குள் பதில் கூற வேண்டும் என்பதனால் நொடி என்றே அழைத்துள்ளனர்.அவற்றை மீட்டுபார்ப்போம்.

பழமொழியுடன்கூடிய விளையாட்டுக்கள்

1. தக தக தங்கம் போலவே.....
2. வெட்ட வெட்ட தளைக்கும் மரம்..
3. எட்டுக்கால் ஊன்றி.....
4. ஊசிமூக்கான் சந்தைக்கு....
5. சுளகு நிறைந்த சோளம்பருப்பு..
6. தொப்பி களண்டான்....
7. ஏறேறு சங்கிலி.....
8. குச்சிவீட்டுக்குள்ள.....
9. ஒரு குப்பிக்குள் இரண்டு....
10. செத்தமாடு....
11. தாய்வீட்டில் மகன் சந்தை...
12. விடிய விடிய பூப்பட்டி...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக பழமொழியுடன் கூடிய ஏராளமான விளையாட்டுக்கள் இருந் துள்ளன. இருந்தாலும் இவை இன்னும் வேறு பெயரிலேயே விஞ்ஞான கலவை யுடன் வெளிவருவது எமக்கு ஓரளவு மன ஆறுதலை தருகின்ற தல்லவா?

தொடர்ந்தும் நாம் காண வருவது எமது பாரம்பரிய விளையாட்டுக்களாக இருந்தாலும் அவற்றை மறந்துவிடாமல் அவற்றை மெருகூட்டி இக்கால விளையாட்டு விழாவின்போது கலாசார விளையாட்டு விழாவென்ற பேரிலே குறிப்பிடப்பட்ட சில விளையாட்டுக்கள் மட்டும் விளையாட வைக்கப்படுகின்றது. அந்த விளையாட்டுக்களாவன:

1. யானைக்கு கண்வைத்தல்
2. முட்டி உடைத்தல்
3. வழுக்கு மரம் ஏறுதல்
4. தலையணைச்சமர்
5. கயிறு இழுத்தல்
6. சங்கீத கதிரை
7. மட்டை இழைத்தல்
8. பலூன் ஊதிஉடைத்தல்
9. சைக்கிள் ஓட்டம்
10. பனிஸ் ஓட்டம்
11. தேங்காய் திருவுதல்
12. சந்தைக்கு போதல்
13. முயல் ஓட்டம்
14. எலி ஓட்டம்
15. தாரா நடை
16. சாக்கோட்டம்

போன்ற இன்னோரன்ன பல விளையாட்டுக்களும் இவற்றுள் அடங்கும். இவ்வாறு அறிவிற்கும் ஆற்றலுக்கும் தேவையான வினோ தமான விளையாட்டுக்களை எமது முன்னோர்கள் எமக்காக உருவாக்கி வைத்துள்ளனர்.



எம்மாலானவர்கள் இவற்றினை ஒதுக்கி வைத்துவிட்டு மேலைத்தேசத்தவனின் உபாதை, உயிராபத்தை தருகின்ற விளையாட்டு க்களை விரும்பி எமது கலை கலாசாரத்தினை துறந்து எமது

திறமையினை வெளிநாட்டவருக்கு வெளிக்காட்டுவதில் வெட்கப்படுவது எத்தகு எளிமையானது என்பதை நாம் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். கையடக்க தொலை பேசியிலும் இன்று விளையாட்டுக்களை விளையாடலாம். இந்த விளையாட்டால் உடல் ஆரோக்கியம் வளருமா? உயிராபத்து விளைவிக்கும் கார் ஓட்டப்போட்டி, மலையேறும் போட்டி, உந்துருளி, நீச்சல் போட்டி போன்ற எத்தனையோ பயங்கரமான விளையாட் டுக்கள் இன்று உலகில் நடை பெறுகின்றன. எத்தனை விளையாட் டுக்கள் வந்தாலும் எமது கிராமிய விளையாட்டுகிணையாகுமா? இல்லவே இல்லை. இவையும் எதிர் காலத்தில் மங்கி மறைந்து பாரம்பரிய விளையாட் டுக்களாக மாறி எதிர்வரும் நூற்றாண்டு களில் விஞ்ஞான வளர்ச்சியின் தாக்கத்தால் பல ஆச்சரியமூட்டத்தக்க விளையாட்டாக மலரத்தான் போகின்றன அதற்கு யார்தான் என்ன செய்ய முடியும்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாடிழந்தோம்...!

ஆவிகள் பாவிகள் எனவாகிச் சாகும்
தூவியநல் விதைகளையோ வெள்ளம் விழுங்கும்
காவியமும் போற்றியசீர்ப் பண்புகள் நோகும்
சீவியமும் இதுவானால் வாழ்ந்தென்ன லாபம்?

வன்முறைகள் வாய்விடவே மனிதம் துடிக்கும்
புன்மைகளோ கூத்தாடப் புனிதம் தவிக்கும்
நன்முறைகள் எவ்வெவரும் கைக்கொண்டு வாழின்
இன்முகந்தான் காட்டிடுமே வாழ்வுற்ற அர்த்தம்

பயமுற்றும் பலமற்றும் நாடோடி யானோம்
புயல்கண்ட பூப்போல பயணங்கள் போனோம்
அயல்நாடும் சிறைவீடும் உறவாக்கிக் கொண்டோம்
சயனத்தில் இமயத்தின் சிகரங்கள் கண்டோம்

தங்கத்தமிழ் கொண்ட பெருமைகள் சாகச்
சிங்கங்கள் தங்கத்தில் சீர்கேட் கலாச்சு
பொங்கும் அலைபோன்ற நெஞ்சத்துயர்வும்
மங்கத் திசைதோறும் பண்பா டிழந்தோம்

வேதங்கள் புதிதாக்கிப் பெருமை கொள்ளாமல்
பேதங்கள் பலகொண்டு "சாதி" வகுத்தோம்
பாதங்கள் மனஞ்சென்ற திசையிற் பதித்தே
ஏதங்கள் பலகண்டு சிறப்பை மிதித்தோம்

அறிவென்னும் நிமிரிவுற்று நிறைகாண வேண்டும்
எறிகதிர்க் கோலத்தை மனமேற்க வேண்டும்
வெறிகொண்ட புன்மைகள் தமைமாய்க்க வேண்டும்
முறியாத உயர்வுற்றுச் சீர்கொள்ள வேண்டும்

**இராசையா கலைச்செல்வன்** (அபிவிருத்தி இணைப்பாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிதான பண்பாடு தலைசாய லாமா?
கனிவான கனவுகளில் இடிவீழ லாமா?
மனிதத்தைப் பேணாத செயல்நீதி யாமோ?
குனிவுற்ற நிலைநீங்கக் குறித்து ழைப்போமா?

ஊர் நீங்கித் திசைதோறும் உறவைப் பிரிந்தும்
போர்தந்த சாபத்தின் அவலத்தை நீத்தும்
நேர்கண்ட துயரத்தின் நிறம் மாறிடாதோ?
வேர்கொண்ட பண்பாட்டின் உயிர் ஓங்கிடாதோ?

யுத்தத்தினால் கொண்ட துயரென்று மாளும்?
சித்தத்தின் இருள்மாய ஒளியென்று வாழும்?
உத்தமர் எனமக்கள் புதிதாவ தெந்நாள்?
முத்தொத்து மனிதந்தான் மிளிர்வதும் எந்நாள்?

மதங்கொண்ட தீமைகள் தமைமாய் தெழுந்து
உதயத்துக் கீற்றினை உயிர்சேர்வ தெந்நாள்?
இதயங்கள் தோறுமே இமயங்கள் தோன்றி
நிதங்கண்ட துயர்வென்று நடைகொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரதீவுப்பற்று வாழ் மக்களால் பயன்படுத்தப்பட்ட பண்டைக்கால பாவனைப் பொருட்கள்

**1. ஒரு குடும்பத்தினருக்கு நிலமிருந்தும் வாழ வீடு இல்லாமல் இருந்தால் :**

அடுத்த வீடு, அயல் வீடுகளில் உள்ளவர்கள் இவர்கள் நிலையினை உணர்ந்து ஒன்று சேர்ந்து தாங்கள் தங்களின் இல்லங்களிலே இருந்து ஒரு நாள் பகல் உணவினை கட்டிக்கொண்டும், தங்களிடமுள்ள ஓர், இரு மாட்டு வண்டிகளையும் கட்டிக்கொண்டு வீடு இல்லாத குடும்பத்தினரை வலுகட்டாயமாக அழைத்து கோடரி, கத்தி சகிதம் சோலைக்காடு செல்வர்.

சோலைக்காடு சென்று, அங்கு ஒரு வீட்டிற்குத் தேவையான திருக்கொன்றை, வாகை, முதிரை, பாலை, கருங்காலி, சமுளை, தேக்கு, விற்பனை, நாணை ஆகிய மரங்களின் கால்கள், வளைகள், உலாத்தல்கள், கைமரங்களையும் வரிச்சிக்கம்பிகள் கோமரசங்கொடி, மோதிரக் கண்ணிக்கொடி, பாற்கொடிகள் என்பனவற்றையும் வெட்டி அறுத்து வந்து, வீட்டை எல்லோரும் சேர்ந்து கட்டி இலுக்குப்புல், வைக்கோல், தென்னோலை என்பன கொண்டு கூரை வேய்ந்தும், குளத்துக் களியில் சுவரும், ஆற்றுக் களியில் வீட்டுத்தரையுமாக கட்டிய அந்த வீடு இன்றில்லை!



**கலாபூஷணம் ஆ.மு.சி. வேலழகன்** (திருப்பழுகாமம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. இதுபோல் குடிக்க, குளிக்க ஒரு வீட்டாருக்கு நீரில்லை என்றால் ....

அயலவர்களாக இணைந்து பூவல், மடு, கேணி, துரவு எனக் கல்லி வெட்டி, தோண்டி அந்நீரையே பொதுவாக எல்லோரும் அள்ளிக் குடித்தும், குளித்தும் ஆடு, மாடு ஆகிய வளர்ப்பு மிருகங்களுக்கும் கொடுத்தும் வந்தனர்.

மேலும் இந்நிலையை மாற்றி காடு சென்று பெரும் மரங்களான பட்ட மரங்களும், பச்சை மரங்களுமான நாவல், விளினை, முதிரை, பாலை எனக் கண்டு நான்கு அடி, ஐந்து அடி நீளங்களில் சில துண்டங்களாக கத்தரித்தும் ஒவ்வொரு துண்டங்களையும் ஒருவித கொட்டு உளி எனும் ஆயுதத்தைக் கொண்டு தங்களின் உடல் வலிமையால், முயற்சியால் இரண்டடி, இரண்டரையடி உள்ளிடை கொண்ட அளவில் கொட்டுகளாகக் குடைந்து அக்கொட்டுகளையே நிலத்தில் இருபதடி, இருபத்தைந்தடி, பத்தடி, பதினைந்தடிகளை நீர் ஊறி வரும் நிலத்திற்கேற்ப பதித்து பல அடிகள் ஆழத்தில் இருந்த தண்ணீரை மரக்கொட்டுகள் ஊடாக அளவாக அள்ளிப் பயன்படுத்தவென பாரிய கவர் மரத்தை கண்டு வெட்டிக்கொண்டு வெட்டிய மரமும் வைரமான பாலை, வாகை, கொன்றை, முதிரை எனத் தேர்ந்து வெட்டிக்கொண்டு தேக்கு, சமுளைகளில் துலா, தேக்கு, விண்ணாங்கு ஆகிய இன மரத்தில் பத்திக்கை, சடவேற்பு, விற்பனை, வாகை, கொன்றை, முதிரைகளில் துலா அச்சக்குற்றி நாவல், விளினை பனிச்சை, வம்மி ஆகிய மரங்களில் தண்ணீர் அள்ளும் பட்டை இதுபோல் கொட்டினுள் மண் எடுக்கும் பட்டையாகவும் அனைத்தையும் மரங்களினால் தோண்டிக் குடைந்து செய்து தண்ணீர் அள்ளி அனுபவித்த சாதனங்களெல்லாம் இன்று இல்லை!

## 3. வீட்டின் அன்றாடப் பாவனைப் பொருட்கள் :

குறிப்பாக உணவு சமைப்பதற்காக, பாவிப்பதற்காகப் பயன்படுத்திய மண் சோற்றுப் பானை, மண்குரச்சி, மண் அரிக்கன் சட்டி, கறி சமைக்கும் மண் சட்டி, மண் கறி மூடி, மண் மடக்கு, தண்ணீர் குடிக்கும் மண் குடுக்கை பானை, தண்ணீர் அள்ளி வைக்கும் மண் குடம், மண் சிறு சட்டி, மண் நெல் அவிக்கும் பெரும் சட்டி, பால் காய்ச்சும் மண் சட்டி, தயிர்ப் பானை,

மண்ணினால் செய்த அண்டாப் பானைகள், மண் பாற்குடங்கள், முட்டிகள், கறவைப் பானைகள் என்பன இன்றில்லை.

பனை ஓலைப் பாய்கள், தட்டுக்கள், விசிறிகள், சமையலறை அடுக்குப் பெட்டிகள், பலகாரப் பெட்டிகள், குட்டான் பெட்டிகள், கொட்டப் பெட்டிகள், உடை துணி வைக்கும் கட்டுப் பெட்டிகள், பம்பரம் சோற்றுப் பெட்டிகள், மண் சுமக்கும் ஓலைப் பெட்டிகள், கல்பன் உமல்கள், பன்னினால் இளைத்த குட்டான்கள், பன்பாய்கள், திருக்கைக்கல், அம்மி, குளவி, உரல், உலக்கை, சுளகு, மூங்கில் பிட்டுக்குழல், உணவு உண்ண உணவு கட்டிக் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பயன்படுத்தும் பாக்கு மரத்தின் பழுத்த மட்டையானது கோப்பத்து மட்டை, தண்ணீர் கொண்டு செல்ல பயன்படுத்தும் நாடங்குடுகு உணவை பல மணி நேரங்கள் பழுதுபடாமல் அடைத்து வைக்கவும், கொண்டு செல்லவுமான மூங்கில் குழாய்கள், அண்டா அடிக்கும் மத்து, உப்புச் சிரட்டை, திருநீற்றுச் சிரட்டை, குற்றிப் பலகைகள், உணவுப் பண்டங்களை நிலத்தில் வைக்காமல் பாதுகாப்பாகக் கட்டித்தூக்கும் கறுவிலி நாரினால் திருத்திப் பின்னிய உறிகள் வெண்கல உணவு உண்ணும் வட்டி, தண்ணீர் குடிக்கும் செம்பு, படிக்கம், சேவறைக்கால் காழாஞ்சி, வெண்கல குடம் வெற்றிலை, அரச இலை வட்டா, சாதாரண வெற்றிலை வட்டா, துப்பறகாழஞ்சி, சுண்ணாம்புக் கிழவடு, சருவத் சட்டி, சருவப் பானை, தாழ்விளக்கு, குத்து விளக்கு, தூக்கு விளக்கு, சருவப் பானை, சருவக் குரச்சி, சருவ அரிக்கஞ் சட்டி

## 4. தொழில் விடயமான கருவிகள்:

பொதுவாக கத்தி, கோடரி, வாச்சி, உளி, கல்லுளி, கொட்டுளி, குறுக்கு வாள், சட்ட வாள், ஆவுதார் வாள், சீவுளி, மூலமட்டம்,தட்டுக்கட்டை, இரும்பு ஆப்பு மரங்கள், கொடிகளிலான பொறி,எறிகணை, ஈட்டி, வில், அம்பு, கவுண், கெற்றற்போல், மருந்துத் துவக்கு, வாள், கிறிசு, சுருட்டு வாள்

## 5. விவசாயத்தோடு கூடிய பாவனைப்பொருட்கள் :

ஏர்குற்றி, மேழி ஏற்கால், நுகம் ஆகியவை இணைந்த ஏர் மண்வெட்டி, உழவுக்கென பயன்படுத்தும் எருத்து மாடுகள், மிதிக்க, உழவ, களி துவைக்க சூடு மிதிக்கவெனப் பயன்படுத்தும் கடா எருமைகள் நிரந்தரமாக தங்கி வாழ்ந்து விவசாயம் செய்து புரையோடு கூடிய வாடி, நெல் கட்டி வைக்கும் அட்டாளை, காவற் பரண், சுடு வால், கதியால் வேலி, ஏறு கடப்பு, படலைக் கடப்பு, உழலைக் கடப்பு, அறுவடை தாள் கத்தி, குரக்கன் அறுக்கும் கத்தி, சூடு வைக்கப் பயன்படும் ஏணி, சவள், உப்பட்டி கட்டும் நார்க் கயிறுகள், நெல் தூற்றும் அவுரி, நெல் அள்ளும் கைப்பெட்டி, கடகம், மரைக்கால், அடி கம்பு, கேட்டி கம்பு, வேலைக்காரன் கம்பு, கட்ட மிலாறு, கோலம், காவற் புரி பட்டறை, கோட் பூட்டான் கயிறு.

## 6. மந்தைகளைக் கட்டப் பிணைக்க :

நாணயக் கயிறு, வட்டவார் கயிறு, தலைக் கயிறு, பிணையற் கயிறு, வளையற் போடும் கயிறு, வீசு கயிறு, வெளு திருக்கயிறு, திருகுப்பொல், முறுக்கு ஆத்தி, சிறப்பைக் சூட்டுக்கோல், கடாக்களுக்கு கட்டும் பெரிய மணி, எருதுகளுக்குக் கட்டும் சிறிய மணி, சதங்கை மாலை, சங்க மாலை, கொம்புக்கவசம், கருத்தடை கிட்டிப்பொல், கட்டை வண்டி, பெட்டி வண்டி, வில் குதிரை வண்டி, ஒற்றை மாட்டு வண்டி, இரட்டை மாட்டு வண்டி, ஒற்றை மாட்டு கூடார வண்டி, இரட்டை மாட்டு கூடார வண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. மீன் பிடிக்கும் கருவிகள் :

அலகு பொருத்திய மீன் எறியும் கணை, பறி, கொண்டடி, அத்தாங்கு, கரப்பு, எறி கயிறு, பிரம்பு, தூண்டில், கூடு என்பனவாகும்.

## 8. ஆண்கள், பெண்கள் அணியும் அணிகலன்களாக :

ஆண்கள் :- காறை, வெள்ளைக்கல் மின்னி, சிவப்புக்கல் மின்னிக் கடுக்கன், தங்கப்பல், வெள்ளி அரைஞான் கயிறு, அரைக் கூடு அரைஞான் கயிறு, தங்கச் சங்கிலி, பெண்கள் குழந்தைகள் அரச ஒட்டியானம், தோடு, சவுக்கமணி, சரடு, அட்டியல், கிட்டிக்காப்பு, கால் கரணை, மெட்டி, மூக்குத்தி, மணிகள் கோர்த்த தாலிக்கொடி என்பனவாகும்.

மழை வெயிலுக்கென :-

சாப்பைப்புல் கிளைப்பு, சணல் கோணிச் சாக்கு, தளப்பத்து, தலைகாளுப்பெட்டி, உடை துணிகள் பெண்கள் பதினாறு முளச்சேலை மட்டுமே வேறு உள்ளாடை, கிக்கர், மார்புக்கச்சை மேல் சட்டை, பாவாடை என்பன இல்லாமலும் ஆண்கள் கச்சை, எட்டு முள வேட்டி, சால்வை மட்டுமே.

## 9. உணவுப் பொருட்கள் :

மண்டுப்பிட்டு, மரவள்ளிவத்தல் பிட்டு, குரக்கன் பிட்டு, குரக்கன் கூழ், குரக்கன் றொட்டி, தவிட்டுப் பிட்டு, சோளன் றொட்டி, சோளன் கூழ், சோளன் கழி, நெருப்புச் சோறு, ஒல்லிப் பருப்புச்சோறு, சோளன் சோறு, அண்டாந்தண்ணி, முண்டான் பருப்பு சோறு, முண்டான் பருப்புக் கஞ்சி, பன்றி அரிசிச் சோறு, எருமைப் பால் அரிசிக் கஞ்சி, பால் அப்பம், புளிச்சப்பம், வண்டப்பம், மரவள்ளிக் கிழங்கு அவிணலே பல பொழுது உணவு, வற்றாளை கிழங்கு, சோளன் பிஞ்சுக் குலை அவியல்களோடு பல பொழுதுகள் பல குடும்பங்கள் உண்டு பசி போக்கியதுமாகும்.

## 10. அருகி மறைந்த நெல் வகைகள் :

வாணன், உதன் சம்பா, டிக்கிரியான், கறுப்பன், வால்சம்பா, முத்துச்சம்பா, கமுகம்பூச்சம்பா, சீரகச்சம்பா, யானைக்கோட்டுச்சம்பா, முருகன் சம்பா, கறுத்தச்சீனட்டி, வெள்ளைச்சீனட்டி, பத்தாறு குத்தி, பச்சைப்பெருமாள், சிவத்துச்சம்பா, எதிர்க்கருத்து எவராலும் தீண்டாமல் அழிவதும் விதைக்காமல் தன்னிலே உண்டாக விளைந்து அழியும் பன்றி நெல் ஆகும்.

## 11. காட்டு கனி வகைகள் :

கடு புளியம்பழம், நுரைப்பழம், கூழாம்பழம், பனிச்சம்பழம், நோனிப்பழம், பொற்பத்தம்பழம், அமரைப்பழம், துவரப்பழம், தவிட்டம்பழம், மருங்கைப்பழம், நறுவிலிப்பழம், காட்டுமாம்பழம், சுரவணைப்பழம், நாவற்பழம், மீனாட்சிப்பழம், கூழாம்பழம், காரைப்பழம், சூரைப்பழம், வீரப்பழம், விளாம்பழம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. காட்டில் உண்டாகும் கிழங்கு வகைகள் :

அல்லைக்கிழங்கு, கட்டு விழாக்கிழங்கு, கவலைக்கிழங்கு

## 13. இலை வகைகள் :

காட்டு குறிஞ்சா இலை, நறுவிலி இலை, காரை இலை, கானாந்தி இலை, முல்லை இலை, முசுட்டை இலை

## 14. ஊர்பகுதிகளிலும், வயல் நிலங்களிலுமுள்ள இலை வகைகள் நீண்டு வாழ்ந்து அழியும் இலைகள் :

குறிஞ்சா, கொவ்வை இலை, ஐவரி இலை, முடிதும்பை இலை, கும்முட்டி, எலிச்செவி, எழுத்தாணி, நத்தைச்சூரி, நாயுருவி, மணித்தக்காளி, வட்டத்தகரை, ஈர்க்குத்தகரை, பொன்னாவரை, முள்முருங்கை, முள்ளுக்கீரை, குப்பைக்கீரை, தயிர்விளா, அனலடக்கி, வயல் அகத்தி, பசளி, பாவை, பயிற்றை, பீர்க்கை,சுரை, குப்பைமேனி, பிண்ணாக்கு, பிரண்டை

## 15. வயல்களில் வளர்ந்த மீன் வகை :

கொக்கிச்சான், வாளை, மசறி, சுங்கான், கெழுத்தி, குறட்டை, உழுவை, பொட்டியான், மக்கழுப்பொட்டியான், விரால், பனையான், கணையான், ஆரல், வயல் நண்டு, மீசைக்காரப் பனையான்.

## 16. காய் வகைகள் :

நாடங்காய், சுரக்காய், தீன்பலாக்காய், கெக்கரிக்காய், வத்தவக்காய், வெள்ளரிக்காய், பீர்க்கங்காய், குழல் அவரைக்காய், தட்டஅவரைக்காய், கொத்தவரக்காய்

## 17. பதார்த்தங்கள் :

குரக்கன், பயறு, பெரும்பயற்றை, உழுந்து, இறுங்கு, திணை, கடுகு, துவரை

## 18. நோயுற்றால் பாட்டி வைத்தியமாக :

காய்ச்சல் வந்தால் :- சித்த மட்டி, பேரமட்டி, பற்பாடகம் ஊறல்

தலை வலிக்கு :- கற்பூரவல்லி இலைச்சாறும், மஞ்சள் படாத சுண்ணாம்பும் சேர்த்து பூச தலைவலி நீங்கியது. மீறி தலைப்பாரம், தூக்கமானால் முடிதும்பைச்சாறு கறிமளகு சேர்த்து தென்னோலைக் குழல் மூலம் நசியம் அடிக்க உடன் தலைப்பாரம் நீங்கும், தூக்கம் போகும்

சொறி சிரங்கிற்கு :- குப்பைமேனி, கறிமிளகு அரைத்துப் பூச ஓர் நாட்களில் சொறி சிரங்கு நீங்கும். கிரந்தி, கட்டு போன்றவற்றிற்கு காட்டு வாகை, எலுமிச்சம் புளிச்சாறு சேர்த்து அல்லது நீர் பில்லாந்தி இலையுடன் எலுமிச்சம் புளிச்சாறு சேர்த்து அரைத்துப் பூச ஓர் நாளில் கிரந்திக்கடி நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நெஞ்சுத் தடிமல் வந்தால் :- முள் முருக்கன் சாற்றில் பச்சை அரிசி சேர்த்து சுடச்சுட கஞ்சி வைத்துக் கொடுக்க உடன் நெஞ்சுத் தடிமல் நீங்கும்.

கண் வருத்தம் வந்தால் :- எலுமிச்சம் புளிச்சாற்றை பழைய மண்வெட்டியில் வைத்து உரசி கண்ணை வளைத்துப் பூசியும், மீறினால் கொள்ளு காய்ந்தவற்றில் விதையை மாவாக அரைத்து மூன்று வேளை கண்ணில் கொட்டினால் கண் நோய் நீங்கி கண் பார்வையும் பிரகாசமாக ஒளிவிடும்.

நாய் கடித்தால் :- செருப்படி எனும் ஒருவித முகிலி நன்னீர் வற்றிய குளங்களில் உள்ளதை பிடுங்கி சுண்ணாம்பு சேர்த்துப் பூச கடியுண்ட காயத்தில் விசத்தை நீக்கும், பின் முருங்கை

இலையும் கறி உப்பையும் கசக்கி ஒருமணி நேரம் வரை கட்டி அவிழ்த்துவிட்டால் சில நாட்களுக்குள் காயம் ஆறிவிடும். மீறினால் அதற்கும் விசம்போக்கி, உடன் ஆற்றும் முகிலியும் உண்டு.

இதுபோல் எலும்பு முறிவுகள், இடுப்புப் பிடிப்பு, வாய்வு, செமியாக்குணம், சிறுநீர் போவது குறைவு அல்லது அதிகம் போவது மலம் கழிக்கச் சிரமம், வயிற்றோட்டம், மூல வருத்தம், வாதம், வாந்தி போன்ற எண்ணற்ற நோய்களுக்ளெல்லாம் மருத்துவமனை செல்லாமலே வீட்டையும் ஊரையும் விட்டு வெளியேறாமலும் ஐந்து சதம் தானும் செலவு செய்யாமலும் வண்டி வாகனம் பிடியாமலும் கைமருந்துகள் செய்து சுகமாக ஆண்கள், பெண்கள், குழந்தைகள், நடுவயதினர், முதியோர், கெண்டுமணிப்பெண்கள் என வாழ்ந்த மண்தான் இந்த மண் எனவே எழுதப்போனால் எழுதிக்கொண்டே இருக்கலாம். இத்தோடு நிறுத்தி விடைபெறுகின்றேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பிரதேச பண்டைக் கால மக்களின் சொற்களின் பதங்கள்

உரை I

வெள்ளன்னையில் படலை திறக்கும் சத்தம் கேட்கிறது. மாடு காலய பூறி பாஞ்சித்தோ

உரை II

இல்ல இல்ல மூத்தாப்போடி மச்சாள், நான்தான் வாரன் என்ன வழிப்பாடல்லாம் சருகாக் கிடக்கு.

உரை I

அது ஒண்டுமில்ல மச்சான். நேற்று மயண்டக்க சின்னனா ஒரு சுழிக்காற்று வீசிச்சி அதுதான் கிடந்த குப்பை கூழம் எல்லா முற்றத்தில கிடக்கு

உரை II

கடப்புக்கு போட்ட உழலக் கம்புல ஒன்று முறிஞ்சி கிடக்கன்ன மச்சான்.

உரை I

அது இந்தக் கெம்பி மாட்டுட வேலடாப்பா. போட்ட முறுக்காத்திய உடச்சிப்போட்டு வரிச்சி வேலியையும் பேத்துத்து போயித்து மச்சான். அதுதான் உல் அடிச்சி வளயப் போட்டிருக்கன்.

உரை II

டின்ட கறுத்தப் பசு ரெண்டும் அப்படித்தான்டா ஆளே. கறுவெல்லாம் புடுங்கித்து வேலி பாயுது. அதென்ன மச்சான் புதுசா சிறாம்பி எல்லாம் போட்டிருக்கா போல.

உரை I

ஓம்.... ஓம்.... இப்ப சரியான புழுக்கந்தானே. அதுதான் வெட்டையில படுக்கலாமே என்று போட்ட நான். அந்தா பறனும் ஒன்று அடிச்சிருக்கன் பாரேன்.

உரை II

சா...... சோக்காதான் இருக்கு. அதென்ன கையில காயம்.

உரை I

அது வெள்ளாம வெட்டக்க தாக்கத்தி வெட்டினது மச்சான். ஒரு வரவ தண்ணியில்லாம செத்துப் போயித்து. அதுல அஞ்சாறு வெள்ளாம நிண்டுது. தலயால கொஞ்சித்து போனன். அது கைல உழுந்துத்து.

**கவிஞர் அழகரசு கோ. கணேஷ் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரை II

எனக்கும் பாரன்மச்சான் சோத்தாங் கையில ஒரு கட்டுக் கட்டி அது வட்டைக்க ஒரு வேலையும் செய்யயேலாம இருக்கு. உப்பட்டி கொஞ்சம் கிடக்கு. அத கட்டி சின்ன சூடு ஒன்று வைக்கலாம் என்டா பெரிய கக்கிசமா கிடக்கு.

உரை I

ஏன்டாப்பா உன்ட முகனக்காரனுட்ட சொன்னா செய்ய மாட்டானோ.

உரை II

அவன எங்க மச்சான் காணக் கிடைக்குது. அவன் என்னிட்ட கணக்கன் ஒன்றும் கயிப்பெட்டியும் வாக்கித்துப் போனவன் போனவன்தான். எங்கையும் தொலைச்சிப்போட்டானோ தெரியா. அந்தக் கள்ளத்தில இயினைக்கு வாரானில்ல.

உரை I

வானமும் ஒரு மாதிரியா நக்கவாரப்பட்டுத்து கிடக்கு. வைச்சிருக்காம களவெட்டிய செருக்கிப்போட்டு அரக்குப் பதிச்சித்து மாட்டால மறிக்கப்பாரு மச்சான்.

உரை II

நேத்து மயண்டைக்க மழ சொட்டுப்போல தூறி வரவு நனஞ்சித்து. களத்து மேடு எப்படிக் கிடக்கோ தெரியாது. களவெட்டி இளகினா பொழியெல்லாம் புதையுமோ தெரியாதே.

உரை I

அதுகள் ஒண்டும் வராது நரசிங்கனுக்கு நேந்துபோட்டு சோழியப்பாரு. நல்ல கச்சானடிக்குது அவிரியக் கட்டி தூத்தப்பாரு. எனக்கு இந்தக் குடிலுக்கு மேய அஞ்சாறு பொலிக்கொடிய வைச்சிரு.

உரை II

உன்னுட்ட ஏத்தும் ஒத்துக்காலும் காலும் கிடக்குதா மச்சான். கால போகத்துக்கு வடிச்சல் உரவைக்க சொட்டுத் தண்ணி கிடக்கு. வக்கடய கட்டிப்போட்டு இறைச்சுட்டா நிலம் வழுத்திடும்.

உரை I

கிடக்குடாப்பா கோடிப்பக்கம் போய் பாரு இறவானத்துல உல்லுக் கலப்பைக்கும் பல்லுக் கலப்பைக்கும். எலயில சொருகி வைச்சிருக்கன்.

உரை II

எங்க மச்சான், புள்ளயக் காணல்ல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரை I

அவ ராவு முருகன்ட ஊட்ட பள்ளச் சடங்காம் என்று போனவை இன்னும் வரல்ல. தண்ணிச்சோறும் கிடக்கு. அவ வந்தா ரெண்டு பேரும் கரச்சி குடிக்கலாம்.

உரை II

முருகன்ட கடசிப் பொடிச்சும் பக்குவப் பட்டுத்தாமே.

உரை I

ஓம் மச்சான் அந்தப் பெட்ட பெரிய புள்ள ஆகி மூன்று மாசமா போகுது.

உரை II

அப்ப அவனுக்கு ரெண்டு கொமரு இருக்கு.

உரை I

ஓம் அவன் அதுகள் ரெண்டுக்கும் கைக்கூலி சம்பாதிச்சா சரிதான்.

உரை II

அந்தா என்னவோ கவுண்டு கிடக்கு. அது என்ன மச்சான்.

உரை I

அது கடகம் மச்சான். எலி நறுவிப்போட்டுது பொத்தலாமே என்று திரிகைக்கு மேல கவுட்டு வச்சிருக்கன். நேற்று அம்மிட குழவியும் உடைஞ்சி போட்டுது.

உரை II

அதப்படி மச்சான் உடைஞ்ச.

உரை I

நான்தான் மச்சான் சில்லற காச எடுப்பம் என்டு உரல எடுத்துப்போட்டு பெட்டிய திறந்து வல்லுவத்த எடுத்தன். கால் தடக்கி குழவி உருண்டு போய் உலக்கையில பட்டு ரெண்டாயித்து.

உரை II

இந்த மாட்டு வண்டில் வெட்டயால எடுத்து கன நாளாகுது போல ஒட்டற புடிச்சி கிடக்கு.

உரை I

ஏன்டாதப்பா அதுக்கு ரெண்டு குத்துக்கால் உடைஞ்சி குடத்தையும் சாடயா பொத்துப்போட்டுது. பட்டம் வேற இறுக்கனும். நேகமும் பழசாப் போச்சி மச்சான். பீச்சாங் கை கடையாணி வேற காணல்ல. பூட்டாங் கயிறு ரெண்டும் இல்ல. அதில கிடந்த தொட்டில் சாங்கும் இல்ல. அதிலப்ப நடு அச்சும் பொட்டியும்தான் ஒரு மாதிரியா கிடக்கு. இனி இந்தப் போகத்திலதான் செரிக் கட்டோனும். கையில அரச் சல்லியும் இல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரை II

எல்லாருட பாடும் அப்படித்தான் கிடக்குடாப்பா. நானும் பட்டற கட்டி வச்ச நெல்லக் குடுத்துப்போட்டுத்தான் நிலையெடுப்பு காச கொடுத்த. இனி ரெட்டிப்பும் விதைப்பும் கிடக்கு. அதுக்கும் ஒரு வசதியப் பாக்கனும்.

உரை I

அவன்ட மிலத்துப் பங்கு மடுவுக்க நல்ல மீன் கிடக்காம் மச்சான். பனையானாம், துள்ளுவண்டனாம், குறட்டை, கொக்கிச்சான், ஐரல், ஆரல் எல்லாம் கிடக்குதாம். என்ட கரப்பும் பேந்து போய் கிடக்கு.

உரை II

என்னிட்ட அத்தாங்கும் பறியும் கிடக்கு மச்சான். சாயிந்திரம் இணல் கிறுகினாப்போல போனா இருட்டுறத்துக்கு முதல் வந்திரலாம்.

உரை I

ஓம் அஞ்சாறக் கொணந்தா உள்ள போட்டு ஒரு தீயல் கூட்டு ஒண்டு வைச்சுடலாம்.

உரை II

அத்தாங்க கோணிப் பைக்குள்ளதான் போட்டு கட்டி வைச்ச. போய்த்தான் பார்க்கோணும். காலைக்கதான் பறியும், தூண்டலும் கிடக்கு. அத்தாங்கு ஒள்ளம் வரிச்சி கொடி புடிச்சா சரி. நான் மதிவழிக் கட்டயம் போட்டுத்து காட்டுக்க போய் வரிச்சி கொடி வெட்டனும்.

உரை I

ஒன்னிட்ட பழய வட்டு வளையம் இல்லையா மச்சான்.

உரை II

கெடக்கனும், தாறன்டாப்பா என்னத்துக்கு.

உரை I

அடுக்களையில இந்த மடக்கு சட்டி பானைகளை வைக்கத்தான்.

உரை II

சரி தாறன். நம்மட கந்தன்ட கல்வாடி எப்படி போகிதாம்.

உரை I

பரவால்லடாப்பா அவன் நல்லா பிரயாசப்படுறான். தெடல் காணியும் மூன்று பங்கு வாங்கிப் போட்டானாம். கல்வாடி நல்லாப் போகுது. அவன்ட புரியத்திற்கு ஏத்த பெடியனும் மகளக் கட்டியிருக்கான்.

உரை II

நிலவாடியோ, மேச வாடியோ, அச்சும கின்னம் சொட்டும் தேடி திரிஞ்சான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரை I

மேச வாடிதான் போட்டிருக்கான் மச்சான். ஒரு களவாய் கல்லு குத்திப்போட்டானாம். முந்த நாள் ஒரு வண்டி கொள்ளி ஏத்தி வந்தவன் சூளை வைக்க. மிச்சத்த கல்லு குத்தி வைச்சிருக்கானாம்.

உரை II

அப்போ ஆரிட அரக்கன் தொடுவயாம் களிமாடு மிதிக்கிற

உரை I

அவ ஊர்ப்போடி பச்சப் பிள்ளையிரதாம்.

உரை II


அவர் எனக்கு அம்மாச்சி முறை தானே. காளியாத்த எனக்கு குஞ்சாத்த என்டா சின்னப்பண்ட மச்சான்தானே ஊர் போடியார். அது நல்ல அரக்கன் தொடுவதானே. அது சரி மச்சான் நான் வந்து வெகு நேரமாகுது. பல சோழிகள் கிடக்கு நான் போறன்.

உரை I

ஓம் மச்சான் நானும் அல்லப் பக்கம் போகனும் கொம்பில் பசுவும் கன்டு ஈண்டுதாம் பட்டியடிக்குப்போய் அண்டாத்தண்ணி கடஞ்சி வைச்சிருக்கானாம். அதையும் போய் எடுத்து வரனும் வேளைக்கு போனாத்தான் அவனுகளிட்ட பட்டியடி விசளத்த கேக்கலாம். நீ போயித்து வாகா.

உரை II

சரி புள்ள நான் வாறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமை வளம் பொங்கும் படுவான் கரையே !

பசுமை வளம் பொங்கும்
படுவான் கரையே
பழந்தமிழ் மண்ணின்
விருட்சம் நீயே.

மட்டுநகர் எமக்களித்த
வெட்டவெளி காற்றே
உன்னை மனதுக்குள்
சுமக்கின்றேன் வரி வரியாக.

உன்னை மறக்காமல்
இருப்பதற்கோர்
கவியுரைக்கிறேன்.
என்னை மறக்காமல்
நீயிருக்க வரம் கேட்கிறேன்

கிராமத்து மொழி நடை
குறைகிறதே
எங்கள் பசுமையின்
வளர்ச்சியும் அழிகிறதே.

அழிந்ததா பழந்தமிழ்
பண்பாடு இல்லை - இனி
எழுந்திடும் பழங்கால
வரலாறு.

இளந்தளிர் கூட்டமே
விரைந்திடு -வினையறுத்தவன்
எவனோ எதிர்த்திடு.

படுவான் கரையின்
பசுமைகளை
ரசித்தேன் நானும்
அழகழகாய்.
குளங்கள், குட்டைகள்,
நதிகள், மலைகள், வயல்கள்,
பசுக்கள், ஆடுகள், காடுகள் ,
கோவில்கள், வீடுகள்,
குடிசைகள், மீன்களும்,
மான்களும் ,
மேம்மாந்தர்களும்
வாழும் எங்களூர்

எங்களூர் அந்தநாள்
ஞாபகங்கள்
மனதிலே ஊறிக்
கிடக்குதே.



**ஈழக்கவி ரசிக்குமார்** (விவேகானந்தபுரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றாத அந்த ஆறுகள்
வடிவாக இன்னமும் ஓடுதே.

நெல்வயல் விளையும்
எங்களூர்
இங்கே நேர்மையும்
குடிகொள்ளும்
கேழுங்கள்.
பசுமையின்
புரட்சி இங்கே
இனிமையாய்
போக்கும் பசியையும்.

கண்களும் மெல்ல
தவழுமே
இளம் பெண்களின்
அழகும் கொள்ளையே.
ஆண்களும் அழகுதான்
கேழுங்கள்
அவர்கள் உழைப்பிலே
வீரர்கள் பாடுங்கள்.

எத்தனை குளங்கள்
பாருங்கள்
அதில் குளிக்கும்
பறவைகளிடம் கேழுங்கள்.

எங்களூர் பெருமையின்
ரகசியம்.
இங்கே எத்தனை
பேருக்கு தெரிந்திருக்கும்.

வரிசையில் நிற்கும்
பனைமரம் - அதை வெகு
சிறப்பென்று நானும் -
பாட வேண்டும்.

எத்தனை பேரின்
படிப்புக்கு பனைமரம்
தந்தது பருப்புக்கள்!

மொத்தமாய் தோள்களில்
சுமந்து நாங்கள்
மண்குவியல் மேட்டில்
நட்டு வைப்போம்.

விதைகள் ஒவ்வொன்றும்
பொக்கிசமே
ஒவ்வொரு விதையிலும்
ஒவ்வொரு கிழங்குகள்.

புத்தகம், கொப்பி, பேனா வாங்க
நத்தாருக்கும் உடுப்பு எடுக்க.
பொங்கலுக்கு புத்தாடை வாங்க
பனைமரக் கொட்டைகள்
உதவி செய்யும்.

வீட்டுக்கு பத்து
பனை வையுங்கள்
இனிமேல் பனைகளை
தறிக்காதீர்கள்.

நம் நாட்டுக்கு
பெருமை பனையென
சொல்லுங்கள்.
ஏழை வீட்டுக்கு உதவும்
பனையினை
நாமும் வாழ்த்தி
வரவேற்போமே.

முக்கனி விளையும்
பூமியிது
முக்கண்ணன்
குடியமர்ந்த தலமுமிது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கெல்லாம்
அரச மரம் இருக்கிறதோ
அங்கெல்லாம்
யானைமுகன்
குடியிருப்பார்.

ஒற்றுமை நிறைந்த எங்களூர்
ஒரு தடவை
வாருங்கள் சுற்றுலா!

படுவான் கரையிதை
போற்றுவோம்.
பல படைப்பாளன்
இங்குள்ளான் வாழ்த்துவோம்.
தோள்களில் அவர்களை
இருத்துவோம்.
கவிகளில் பாடி
அசத்துவோம்.

மீன்களும் பாடும் எங்களூரில்
மேம்மாந்தரும் இங்குதான்
பிறந்தனரே.

கல்வியில் சிறந்து
விளங்கினரே.
கற்றவன் என்றும்
பெயர் பெற்றனரே.

பெருமைகள் பெற்ற
எங்களூர் படுவான்
கரையிது பசுமையூர்.

பணிவான ஊரிது
பழங்கால மண்ணிது.
உழைக்கின்ற கரங்களை
படி ஏற்றிடும்!
நகைக்கின்ற நாவினை
கிழித்தெறியும்.

நான் பிறந்த எங்களூர்
நால் திசையும் மங்கலம்
சூழவுள்ள கிராமங்கள்
சுகம் பெற வேண்டுகிறேன்

வயல் வெளியெல்லாம்
நெல் மணி காய்க்க!
வரும் வினையெல்லாம்
கணபதி காக்க.

திருவருள் என்றும்
குடியிருக்க
தீராத வினைகள்
திரும்பியோட.

எங்களூர் பெருமைகள்
மங்காமலிருக்க.
இளைஞர்கள் நாமும்
ஒன்றாக உழைப்போம்.

மங்கலம் கொண்டெழும்
மதுரசம் பொங்கியே
மன்னவன் வாழ்ந்த
பொன்னான பூமியில்.
எந்நாளும் நல்லதே
நடந்தே தீரும்
இதை சொல்லவே
வந்தேன்
ஓடோடி நானும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரதீவுப்பற்று பிரதேசமக்களின் வாழ்விட இல்லங்கள்

மீன்பாடும் தேனாடு எனவர்ணிக்கப் படுகின்ற மட்டக்களப்பு மாவட்டத்தின் நகரிலிருந்து தென்மேற்கு திசையில் கிட்டத்தட்ட 33 கிலோமீற்றர் தொலைவில் மட்டக்களப்பு வாவியின் மேற்குத் திசையில் படுவான்கரையில் போரதீவுப்பற்று பிரதேசம் அமைந் துள்ளது. இப் பிரதேசமானது கணிச மான அளவு கிராமங்களைத் தன்னகத்தே அடக்கியுள்ளது. நாற்பத்து மூன்று கிராமசேவையாளர் பிரிவுக ளையும் கொண்டது. தனித் தமிழ் மணம் கமழும் பண்பாட்டின் ஊற்றாகவும் இன்றளவும் போற்றப்படும் பெருமைக்குரியது. இப் பிரதேசமக்கள் பழமையான பாரம்பரிய வாழ்க்கை முறையை பின்பற்றியவர் களாகவே இன்றும் வாழ்ந்துகொண்டிருப் பதனை இதற்கு எடுத்துக்காட்டாக கொள்ளலாம். இப் பண்பாட்டம்சம் நிறைந்த மக்களின் வாழ்விட இல்லங்கள் அன்றும், இன்றும் எவ்வாறு அமைந்திருந்தது என்பதுபற்றி நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகின்றது.

எந்தவொருமக்கள் சமுதாயமும் எப்பிரதேசத்திலும் தங்கள், தங்கள் தொழிலை மையமாகக் கொண்டே காலத்திற்கேற்றால்போல் தங்கள் வாழ்விட இல்லங்களை அமைத்து வாழ்ந்தார்கள் என்பது வரலாறுகண்ட உண்மையாகும். இந்தவகையில் போரதீவுப்பற்று பிரதேசமக்கள் மீன்பிடி, ஆடு, மாடு, கோழிவளர்ப்பு, வேளான் மைச் செய்கை, சேனைப்பயிர்ச் செய்கை, மரக்கறிப் பயிர்ச்செய்கை, பழ மரங்கள் நடுதல், மட்பாண்டம் வனைதல், களியினால் கல்வெட்டுதல் போன்ற பல தரப்பட்டதொழில் முயற்சிகளை தங்களின் வாழ்வாதாரமாகக் கொண்டுவாழ்ந்தார்கள்.

ஆதிவாசிகளாகக் கருதப்படும் வேடர்கள் நீர் நிலைகள் உள்ள இடங்களை நாடி கற்குகைகளிலும் பரந்து அடர்ந்த மரங்களின் கீழும் மரப் பொந்துகளிலும் தங்கள் வாழ்விடங்களை அமைத்து வேட்டையாடுதல், மீன் பிடித்தல் தேன் எடுத்தல் என்பன போன்ற தொழில்களை மேற்கொண்டனர். இதற்கு எடுத்துக்காட்டாக போரதீவுப்பற்று பிரதேச கிராமங்களை அண்டிய பகுதிகளான கூனன்குளம், சுனையன்கல், நெல்லுச் சேனை, கல்லடிப் பிள்ளையாரடி, என்பனவற்றைக் குறிப் பிடலாம். இதற்கு ஆதாரமாக அவர்களால் பயன்படுத்தப்பட்ட கருங்கல்லான பல பொருட்கள் அவ்வவ் இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. தற்காலத்தில் இவ்வாறான வேடர்கள் இப் பிரதேசத்தில் இல்லாதுவிட்டாலும் மகியங்கணைப் பகுதியில் தற்காலத்திற்கேற்ற இல்லங்களை அமைத்து வாழ்ந்துவருகிறார்கள்.



**திரு. செ. சதாசிவம்** (மண்டூர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பிரதேசத்துக்குரிய கிராமங்களில் இந்துக் கோயில்கள் உருவாக்கம் பெற்றதை அடுத்து அங்கு கோயில் தொண்டுகள் செய்வதற்காக பல குடிவழி மக்களும் கோயில்களை அண்டிய பகுதிகளில் குடியமர்த்தப்பட்டார்கள். அவர்கள் அவ்வப் பகுதிகளில் சிறு குடிசைகளை அமைத்து வாழ்ந்தார்கள். பழைய காலத்தில் கோயில் கூரையை விட வாழ்விட இல்லங்களின் கூரைகள் உயரமானதாக அமைத்தல் கூடாதென்ற நம்பிக்கை நிலவியதால் இதற்கமைவாகவே தங்கள் வாழ்விடங்களை அமைத்தார்கள். காலப்போக்கில் இவை மாற்றமடைந்து உயரமான கல்வீடுகளும் மாடி வீடுகளாகவும் இன்று காட்சியளிப்பதனை நாம் காணலாம்.

ஆற்றங்கரையோரங்களில் காடுகளை அண்டிய பகுதிகளில் மாடு, ஆடு மேய்க்கும் தொழிலை மேற்கொண்டவர்கள் "இடையர்களாக" இனங் காணப்பட்டார்கள். இவர்கள் படிப்படியாக வாழ்க்கையில் முன்னேறி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இவர்கள் மரந்தடிகள், ஓலைகள் போன்றவற்றை பயன்படுத்தி பரண், சிறு குடிசை அமைத்து காவல் அரணாகவும், வாழ்விடமாகவும் கொண்டு தங்கள் உயிரையும், தொழிலையும் பாதுகாத்து வாழ்ந்தனர். போக்குவரத்து சாதனமாக மாட்டு வண்டியையும் உருவாக்கி தங்கள் தொழிலுக்கு ஆதாரமாகக் கொண்டார்கள். காலப்போக்கில் விவசாயத்துறையில் நவீன முறையைக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்கி இன்று தங்கள் பொருளாதார வசதிக்கேற்ப செங்கல்லால் ஆன வீடுகளை அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

சுமார் நாற்பத்தைந்து ஐம்பது வருடங்களுக்கு முன்னர் போரதீவுப் பற்று பிரதேச கிராமங்களில் சிறுகுடிசைகளும், களிமண் வீடுகளுமே நிறைந்து காணப்பட்டது. இவ் வீடுகளுக்கான சுவர்கள் களிமண் அல்லது களிக்கல் அமைந்தனவாகவே இருந்தது. வனாந்தரங்களுக்குச் சென்று தங்கள் வாழ்விடங்களை அமைப்பதற்குத் தேவையான மரங்களை வெட்டி வருவார்கள். அவை "மாங்கு" கம்பு என அழைக்கப்படும். இரண்டறையும் திண்ணையும் அல்லது மூன்று அறையும் திண்ணையும் என்ற வகையில் இவ் வீடுகள் அமைந்திருந்தன. காட்டுக் கம்புகளில் பெரிய கட்டைகளை துண்களாக நடுவார்கள். சிறு கம்புகளை வீட்டின் அளவீட்டிற்கமைய நட்டு குறுக்காக கம்புகளை வைத்து ஒரு வகை கொடியினால் இடைவெளி விட்டு வரிந்து கட்டுவார்கள். சுவரை அமைப்பதற்கான களிமண்ணை பதப்படுத்தி கம்புகளின் இடைவெளிக்குள் பெரிய பந்து போன்ற களி உருண்டைகளை அடுக்கி சுவரை கட்டியெழுப்புவார்கள். பின் களிமண்ணால் அச்சுவரை பூசி மினுக்கி கவர்ச்சியாக்குவார்கள். வீட்டுக்கான கூரை கிடுகினால் வேயப்பட்டிருக்கும். சிலர் வைக்கோலை பயன்படுத்தி கிடுகின்மேல் வண்ணமாக வேய்ந்திருப்பார்கள். வீட்டின் உள் நிலமானது களிமண்ணினால் சமப்படுத்தப்பட்டு பசுவின் சாணத்தினால் மெழுகப்பட்டிருக்கும். விசேட தினங்கள், விரத நாட்கள், வாரத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் சாணத்தினால் வீட்டின் தரையை மெழுகுவது வழக்காறாக இருந்தது.

உணவு சமைக்கும் இடமாக வீட்டின் முன்புற ஓரமாக சிறுகுடிசைகளை அமைத்திருப்பார்கள். இதற்குமுன் பக்கத்தில் தென்னோலையால் பின்னப்பட்ட "பன்னாங்கு" கட்டப்பட்டிருக்கும். இது மழை, வெயில், காற்று போன்றவற்றிலிருந்து பாதுகாப்பு தருவதாக இருந்தது. வீட்டின் முன்புறம் நீர் தேவையை பெற்றுக்கொள்வதற்காக "மிதிகிணறு" அமைந்திருந்தது. வீட்டின் முன் வாசலில் தென்னங்குற்றிகளினால் தடையங்கள் இட்டு அதன் நடுவில் ஆற்றுமணல் போட்டு பரவி இருப்பார்கள். இயற்கை காற்றை நுகர்ந்தவண்ணம் ஓய்வான நேரங்களை சுகமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிப்பார்கள். இவ்விடமானது விருந்தினர்கள், உறவினர்கள் என வீட்டுக்கு வரும் அனைவரையும் வரவேற்று உபசரிக்கும் இடமாகவும் அமைந்திருந்தது. இதனை பந்தல் என அழைப்பர். மின்சாரமில்லாத அக்காலத்தில் முற்றமே நிலாக் காலத்தில் சாப்பிடும் இடமாகவும், சிறுவர்கள் விளையாடும் இடமாகவும், பிள்ளைகளுக்கு கதைகள் சொல்லி அறிவூட்டும் இடமாகவும் இருந்தது. தற்காலத்தில் இவையெல்லாம் மாற்றமடைந்து வீட்டுக்குள்ளேயே வரவேற்பு மண்டபம், மேலே மின்விசிறி, பலதரப்பட்ட கதிரைகள், தொலைக்காட்சிப்பெட்டி, தொலைபேசி, கணணி, வானொலிப்பெட்டி, இறுவட்டுக்கள் போன்றவை மூலம் பெரும்பாலான மக்கள் பொழுதைக் கழிக்கின்றார்கள். இதனால் உறவு முறைகள் குறைந்து வீட்டுக்கு வருபவர்கள் இன்முகந்தந்து வரவேற்பதும் இல்லாதிருப்பதை நாம் காண்கின்றோம்.

இன்றய இப்பிரதேசத்துக்கான வாழ்விடங்களைப் பார்ப்போமானால் கிராம நகர வேறுபாடின்றி நாளுக்கு நாள் மாற்றமடைந்து கொண்டே வருகின்றது. அதற்கமைய இல்லங்கள், கருங்கல், செங்கல், சீமெந்து, கம்பி என்பனவற்றைக்கொண்டு பாரியளவில் கட்டப்படுவதைனையும் நாம் காணலாம். இவற்றுக்கான கூரைகள் தகரம், சீற், ஓடு என்பனவற்றைக் கொண்டு அமைக்கப்பட்டு பல வர்ணங்களை பூசி கவர்ச்சி மிக்கதாக காணப்படுகின்றது.

நாட்டில் ஏற்பட்ட சுனாமி, சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்களின் பின் மக்கள் தங்கள் வாழ்விட இல்லங்களைப் பலமான அத்திவாரமிட்டு கொங்கிறீட் கூரை அமைத்து மாடி வீடுகளாகக் கட்டுவதையும் காண்கின்றோம். உள் தரைக்கு மாபிள் பதித்து அழகு பார்க்கிறார்கள். மிதி கிணறாக நிலமட்டத்துடன் இருந்தவை தற்போது நிலமட்டத்திலிருந்து நான்கு தொடக்கம் ஐந்தடி வரையிலான உயரத்தைக் கொண்ட சீமெந்தினால் முற்றாகக் கட்டப்பட்ட கிணறுகளாகவும் காட்சியளிக்கின்றன. வீட்டுக்கான வரவேற்பறை சமயலறை, கழிவறை, குளியலறை அனைத்தும் ஒரே கூரையின் கீழ் வீட்டுக்கு உள்ளேயே அமைந்திருக்கின்றது. இவ்வாறான மாற்றங்களுடன் இன்றய நவீன காலத்திற்கான மக்களின் வாழ்விடங்கள் மாளிகையைப்போல் காட்சி தருவதனை இப் பிரதேசத்துக்குரிய கிராமங்களில் பரவலாக எம்மால் காணமுடிகிறது.

பழைய காலத்தில் தங்கள் இவ்விடத்துக்கான வளவினை எல்லைப்படுத்துவதற்காக சுற்றிவர தலைகம்புகளை நட்டு, வேலி அமைத்து பனையோலை அல்லது கிடுகினை மறைப்புக்காகக் கட்டியிருப்பார்கள். முன் நுழைவாசலுக்கு மரத்தடிகளாலான உழலைக்கடப்பு, ஏறுகடப்பு என்ற வகையில் அமைந்திருந்து காலப்போக்கில் இவை மரப் பலகையாலான கதவுகளாக, தகரமும், பலகையும் கொண்டவையாகவும் அமைந்திருந்தது. தற்காலத்தில் இவையெல்லாம் மாற்றமடைந்து வேலியாக இருந்தவை மதில்களாகவும் அகன்ற உயரமான இரும்புக் கேற்றுகளாகவும் கிராமங்கள்தோறும் காணப்படுகின்றன.

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல்ல" என்னும் நன்னூல் வரிகளுக்கு ஏற்ப காலத்தின் தேவைக்கேற்ப மாற்றங்கள் அவ்வப்போது நடைபெற்றுக்கொண்டே இருக்கும் என்பது தெட்டத் தெளிவான உண்மையாகும். இந்த வகையிலே எமது பிரதேசத்தின் வாழ்விட இல்லங்கள் நாளாந்தம் மாற்றமடைந்து வருவதனை நாம் அவதானிக்க கூடியதாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நஞ்சுப் போத்தலா...? நாலுமுழக் கயிறா...? தஞ்சம்!

பதினாறுமுழச்சேல பாட்டியம்மா கட்டி வாழ்ந்தாங்க - இப்போ
பாதியுடல் வெளியில் காட்ட வீதியிலே சுத்துறாங்க
நாதியற்ற ஆண்களுடன் நல்லா அவ பழகி வந்து
பாதியிலே கைநழுவ வேற திசை நாடுறாங்க - சிலர்
நஞ்சுப் போத்தல் தஞ்சமென்று எண்ணுறாங்க - மற்றோர்
நாலுமுழக் கயிறு போதும் என்று சொல்லுறாங்க - பதினாறுமுளச் சேலை

டச்போண எப்படியோ பெற்றுக் கொண்டாங்க - பின்
சூட்டிபப் சைக்கிளேறி எங்கும் போறாங்க
உச்சந்தலைக் கனமிகுதி யுள்ளங் கொண்ட எண்ணத்தினால்
ஒருத்தருமே தனக்கு நிகரில்லை என்ற எண்ணங்கொண்டோர் சிலர்
நஞ்சுப் போத்தல் தஞ்சமென்று எண்ணுறாங்க மற்றோர்
நாலுமுழக் கயிறு போதும் என்று சொல்லுறாங்க -பதினாறு

பாட்டுப்பாடும் போனுடனே வந்து போறாங்க - அவர்
பட்டம் பதவி பெற்றோர் போல சுத்துறாங்க
நாட்டுக்கேதும் நன்மையின்றி வாழுறாங்க - காதல்
வேட்டையாட மட்டுமென்று இருக்காங்க - சிலர்
நஞ்சுப்போத்தல் தஞ்சம் என்று எண்ணுறாங்க - மற்றோர்
நாலுமுழக் கயிறு போதும் என்று சொல்லுறாங்க - பதினாறு

பெற்றோரை தெரியா காதலிச்ச காதலண்ணே... என் அழகு அண்ணே....
பெற்றோரை தெரியாம மறுபெண்ணை காதலிச்சா
நித்திரையோ அற்ற நிலை நிம்மதியோ கெட்டநிலை
ஆழும் தரை அறியாம காலை விட்டுச் செத்தவன் போல் சிலர்
நஞ்சுப்போத்தல் தஞ்சமென்று எண்ணுறாங்க மற்றோர்
நாலுமுழக் கயிறுபோதும் என்று சொல்லுறாங்க - பதினாறு.

ஒட்டிப் பிறந்த நாகரீகம் செட்டைமுளைத்து பறந்தது போல் -மேலும்
கட்டிவளர்த்த கலாசாரம் எட்டி விலகியே போனதனால்
முட்டாள் தனமாய் முடிவெடுத்து செத்து மடிந்துமே போனபின்னே
கெட்டவார்த்தைகள் பேசியெமை கீழ்த்தரமாகவே கூறிடுவர் இதனால்
நாட்டிடுவோம் நாங்கள் நற்பணியை
நட்டோர் போற்றி புகழ்ந்து மகிழ்ந்திடுவர்.

**கூழாவடியான் இ. விநாயகம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயத் தொழில் சார் உபகரணங்களும் அதன் பாவனைகளும்

மண் வெட்டி : நிலத்தை கொத்துவதற்கு அல்லது வெட்டுவதற்கு பயன்படும் உபகரணம்.

கத்தி : மரங்களைச் செடிகொடிகளை கம்புகளை வெட்ட உதவும் உபகரணம்.

கோடரி : பெரிய மரங்களை தறிக்க கொள்ளி கொத்த உதவுவது.

அலவாங்கு : வேலி நாட்ட, மடுத் தோண்டுவதற்கு வேலி அடைக்க கம்பி இழுப்பதற்கும் பயன்படுவது.

உல்லுக்கலப்பை (மரம்) : விவசாய நிலத்தை ஆழமாக உழுவதற்கு பாவிப்பது.

சிறகுக் கலப்பை அல்லது புரட்டுக் கலப்பை (இரும்பு) : விவசாய நிலம் உழும் போது மண்ணை புரட்டிப் போடும் உபகரணம்.

பல்லுக் கலப்பை : பெரிய மண் கட்டிகளை உடைத்துக் கரைப்பதற்கும் நெல்லை உழுது மறைப்பதற்கும் பயன்படுவது.

கிடாவடிப் பலகை அல்லது மட்டப்பலகை : முற்காலத்தில் நமது மூதாதையர் எருமைக்கிடா மாடுகளைக் கொண்டு சேற்று நிலங்களைப் பண்படுத்தி விதைக்கும்போது சதுப்பு நிலத்தை சமப்படுத்துவதற்கு பயன்படுவது. தற்காலத்திலும் எருது மாடுகளைக் கொண்டு இவ் வேலையை செய்கின்றனர்.

கைமட்டப்பலகை : சேற்று நிலம் விதைக்கும்போது விவசாயிகள் சிறிய மட்டப்பலகையால் நிலத்தை சமப்படுத்துவர்.

சுத்தியல் : வேலி அடைப்பதற்கு முள்ளுக் கம்பிகளை கட்டைகளில் அடித்து இறுக்குவதற்கும், வேலி கழட்டும் போதும் பயன் படுவது.

ஆணி : வயல் வேலி கழட்டும் போது பயன்படுவது.

ஊக்கு/ஆணி : முட் கம்பிகளை வேலிக் கட்டைகளில் இணைப்பதற்கு பயன்படுவது.

தாக்கத்தி : நெற் கதிர்களை அறுவடை செய்யும் போது பயன்படுவது.

உப்பட்டிக் கயிறு: வெட்டிய நெற்கதிர்களை கட்டித் தூக்குவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

சவள் : சூடு வைக்கும்போது சூட்டை தட்டி சமப்படுத்தும் பலகை.

திரு. மு. பேரின்பராசா (பதவிநிலை உதவியாளர், பி. செ., வெல்லாவெளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைக்காரன் கம்பு: சூடு மிதிக்கும் போது பொலிக்கொடி என்று சொல்லப்படும் வைக்கோலை நெல் வேறாகப் பிரிப்பதற்கு பாவிக்கப்படும் ✔ வடிவக்கம்பு. தற்காலத்தில் கம்பியாலும் செய்து பாவிக்கின்றனர்.

கேட்டிக் கம்பு: வயல் வேலை செய்யும் போது மாடுகளினால் உழவுதல், சூடடித்தல், விதைத்தல், சேற்று நிலத்தை மிதித்தல், கரத்தை வேலைகள் செய்யும் மாடுகளைச் சாய்ப்பதற்குப் பாவிக்கப்படும் சிறிய கம்பு.

கைப்பெட்டி: வயல் விதைக்கும்போது நெல்லை அள்ளி விசிறுவதற்கும் காற்றில் நெல் மணிகளை தூற்றி துப்பரவு செய்யவும் பாவிக்கும் பிரம்பாலான பெட்டி.

மரைக்கால் : நெல்லை அளந்து கணக்கிடும் பிரம்பாலான பெட்டி.

கடகம் : கடகம் என்பது 05 மரைக்கால் நெல் கொள்ளும் பிரம்பாலான பெட்டி.

அவுரி : காற்றில் நெல்லை துப்பரவு செய்வதற்கு கம்புகளாலும் வைக்கோல் புரியாலும் செய்யும் 6-7 அடி உயரமான பொருள்.

கோலம் : முற்காலத்தில் ஈக்கிள் தடி இல்லாத காலம் களவட்டியில் சூடு மிதித்து நெல் மணிகளைச் சாடிக் குவிப்பதற்கு ஒரு கம்பில் காயான் கொத்துகளை காய்விழா புல்லுகளை கட்டிப் பாவிக்கும் சூட்டுத் தடி.

கட்டை மிலாறு : பெரிய நெல்லி மிலாறு இரண்டு சேர்துக் கட்டிப் பாவிப்பது. இது சூடடித்து முடிய நெல் மணிகளோடு இருக்கும் தூசிகள் பொலிக்கொடி வைக்கோல் தூசிகளை வேறாக்குவது.

சாக்கு : சூடடித்து நெல்லை சணல் தும்புச் சாக்கில் கட்டி எடுத்துச் செல்வதற்குப் பயன்படுவது.

கரத்தை/மாட்டு வண்டில் : சூடடித்த நெல்லை வயலில் இருந்து வீட்டுக்கும், ஏனைய இடங்களுக்கும் கொண்டு செல்வதற்கு எருது மாடுகளால் இழுத்துச் செல்லப்படும். இரண்டு சில் உள்ள மரத்தாலான பொருள்.

திருகு பொல்/திருகுக் கயிறு: கரத்தையில் ஏற்றிய நெல் மூடை கட்டையான கயிற்றால் கட்டி 3 அடி நீளமான பொல்லால் இறுக்கிக்கட்டுவது.

பட்டறை : வீடுகளில் நம் முன்னோர்கள் வயலில் விளைந்த நெல் மணிகளை சேமித்து வைத்துப் பாவிப்பதற்கு வைக்கோலினாலும் வைக்கோல் புரியால் வட்டமாகக் கட்டுவது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிர் கோட்டை: வயலில் விளைந்த நெல்மணிகளை போடியார் வீட்டுக்கும் தங்களது குலதெய்வக் கோவில்களுக்கும் முதன் முதல் காவிக் கொண்டு செல்வதற்கு வைக்கோலாலும் வைக்கோல் புரியாலும் செய்யும் சிறிய பொருள்.

குப்பை வாரி : குப்பைகளைக் கூட்டிக் குவிக்கப் பயன்படும் மரம் ஆணி இரும்பாலான பொருள்.

காவல் பரண்/காவல் குடிசை வாடி: இரவு பகல் வேளைகளில் விவசாயிகள் வயல்களில் தங்கியிருந்து மிருகங்கள் பறவைகள் கால்நடைகளால் பயிர்கள் சேதமாகமல் காவல் காப்பதற்கும் கூலியாட்கள் தங்கிநின்று பணியாற்றுவதற்கும் உரிய இடம்.

சுவான்/தீனாத்தட்டி : பழங்காலத்தில் நம் முன்னோர்கள் இரவு வேளையில் யானை பன்றி காட்டெருமை மற்றும் கால்நடைகளால் நமது பயிர், நெற்பயிர்களை இரவு வேளைகளில் பதுகாப்பதற்கு உயரமான தட்டியில் நெருப்பு பற்றவைத்து வெளிச்சம் ஏற்படுத்தி பாதுகாப்பார்கள்.

ஏத்து : நீரை இறைக்க பாவிக்கப்படும் மரத்தாலான ஆறடி நீளமான பெட்டி போன்ற பொருள். நமது மூதாதையர் நீர் பம்பி இல்லாத காலகட்டத்தில் வயலுக்கு நீரை இறைப்பதற்கும் வயலிலுள்ள நீரை வெளியில் அகற்றுவதற்கும் பாவித்த மரத்தினாலான சாதனம் இதுவாகும்.

அட்டாளை / மேற்பரண் : 25, 35 அடி உயரமான மரங்களின் கெப்புகளில் குடிசை அல்லது தட்டி மாதிரி கட்டி பகல் இரவு வேளைகளில் காவல் காப்பது. உதாரணமாக பல ஏக்கர் பரப்புள்ள வயல், சோளன், மரவள்ளி ஆகிய சேனைகளில் இதனைக் காணலாம்.

## மீன்பிடித் தொழில்சார் உபகரணங்களும் பாவனைகளும்

கரப்பு : சிறிய கம்புகளைக்கொண்டு வளையமாக 3 அடி உயரத்திற்கு கட்டி எடுப்பது. மீன் பிடிக்கப் பயன்படும்.

அத்தாங்கு : பட்டு நூலில் சிறிய வலை போன்று பின்னிப் பாவிப்பது.

கொண்டடி/அத்தாங்கு : சிறிய அத்தாங்கை விட பெரியது, வில் வளைவானது.

மண்டா : மீன்களை எறிந்து பிடிக்கும் உபகரணம்.

மரத்தோணி : ஆறுகளில், குளங்களில் சென்று மீன் பிடிப்பதற்கும் நீரில் பயணம் செய்வதற்கும் உபயோகிக்கப்படும் சாதனம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவள் : மீன் பிடிக்க செல்வதற்கு தோணியை செலுத்தும் மரத்தாலான பலகை. இதனை துடுப்பு எனவும் கூறுவர்.

தூண்டில் : மீன் பிடிக்க உதவும் சாதனம். கம்பு தங்குஸ் இரும்பு கொழுக்கு (தேவையான பொருட்கள்)

கட்டுவலை : பட்டு நூலில் கொண்டு 25 அடி 50 அடி நீளத்திற்கு 6 அடி அகலத்திற்கு பின்னப்பட வேண்டும்.

வீச்சு வலை : 10 முழம் 16 முழம் நீளத்திற்கு பட்டு நூலால் பின்னி கீழ் பாகத்திற்கு ஈயத்துண்டுகளால் கட்டிப் பாவிக்கும் சாதனம்.

எறி கயிறு : இது பட்டு நூல் தங்கூசி என்பவற்றில் துண்டிலும் மிதவையும் கட்டி 20-50 அடி தூரத்திற்கு எறிந்து மீன் பிடிப்பது.

பிரம்பு : 20-30 அடி தூரத்திற்கு சிறிய பிரம்புகளை நீளமாகக் கட்டி ஒரு முனையில் தூண்டிலைக் கட்டி பெரிய மீன்களைப் பிடிக்கும் சாதனம்.

பறிக்கூடு : மெல்லிய 05 அடி 6 அடி ஈச்சம் மட்டை காளாந்திக் கம்பு, நெல்லிக்கம்புகளைக் கொண்டு தெகிழல் கொடியால் நீளமாகப் பின்னி எடுக்கும் சாதனம்.

சள்ளல் கூடு : இது ஈச்சம் மட்டை அல்லது மூங்கில் தடிகளைக்கொண்டு நீள் சதுரமாகப் பெட்டி போன்று பின்னி எடுக்கும் சாதனம். தற்காலத்தில் சிறிய கம்பிகளைக் கொண்டும் செய்கின்றனர். ஆறுகளில் தோணிகளில் சென்று ஆற்று ஓரமுள்ள பற்றைகளுக்கருகில் இக் கூடுகளுக்குள் பாசிகளைப் போட்டு நீருக்குள் வைத்தால் சள்ளல், செப்பலி போன்ற மீனினம் இலகுவாக உயிருடன் பிடிபடும்.

வாள் : துவிச்சக்கர வண்டியின் பழுதடைந்த றிம் அல்லது இரும்புப் பட்டங்களில் 03 அடி நீளத்திற்கு வாள் மாதிரி செய்து பாவிப்பது. இரவு வேளைகளில் டோச் அல்லது பெற்றோல் மெக்ஸ் வெளிச்சத்தில் விரால் போன்ற பெரிய மீன்களை ஆற்று ஓரங்களில் மழைக் காலங்களில் தெளிந்த நீர் நிலைகளில் வெட்டி பிடிப்பர்.

சுருக்கு வலை அல்லது இழுவை வலை: இது ஆறுகள் வாவிகள் கடல் என்பவற்றில் நீளமாகத் தண்ணீர் போட்டு இழுத்து மீன்களைப் பிடிக்கும் தற்கால சாதனம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரதீவுப்பற்றும் கலை வளர்ச்சியும்

கலை கலைக்காகவோ! விலைக்காகவோ! அல்ல. மக்களின் உயர் நிலைக்காகவே கலை வாழ்கிறது. இந்த நியதிப்படி போரதீவுப்பற்றுப் பிரதேசமானது "கலைகளின் கூட்டுப் பண்ணையாகவும் கதைகளைப் பேசும் திண்ணையாகவும்" காலங்காலமாக களம் கொண்டுள்ளது. இப் பிரதேசம் முற்றுமுழுதாக கிராமிய மண்வாசம் கொண்டதும் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசமுமாகும். இங்கு தமிழர்களின் கலைகள் தனித்துவ ஓர்மத்துடன் ஓங்கி ஒலிக்கின்றன.

போரதீவுப்பற்றிலே தமிழர் கலை தனியாக மிளிரக் காரணம் என்ன? எனில் இங்குள்ள மக்கள் கலையோடு தம்மை இணைத்துக் கொண்டதும் கலைக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டதுமேயாகும். இங்கு பொதுவாக எப்போதும் கலைமணத்தோடு மக்கள் வசித்தாலும் ஆலயத் திருவிழா, அம்மன் சடங்குக் காலங்கள் முதலியவற்றிலேயே கலை ஊரெங்கும் கதை பேசுகின்றது.

கிராமங்கள் தோறும் கலையை வெளிப்படுத்தும் களமாக இங்குள்ள மக்கள் ஆலயங்களைப் பயன்படுத்தினாலும் கலையைக் கவனமாக வளர்க்கும் களமாக கலைக்கழகங்களை உருவாக்கிச் செயற்படுகின்றனர். அவ்வகையில் இப்பிரதேசத்துக் கலைகளையும் கலைக்கழகங்களையும் எடுத்து நோக்குவோம்.

எமது பிரதேசங்களில் கலைகள் பல உள்ளன. அவ்வகையில் கூத்து, கரகம், கும்மி, கோலாட்டம், நாடகம், வில்லுப் பாட்டு, கவியரங்கு, பட்டிமண்டபம் முதலிய பல உண்டு. இவற்றை வளர்ப்பதில் மக்கள் பெரும்பங்கும் பெரு விருப்பும் கொண்டிருந்தாலும். இவற்றை வளர்க்கும் களமாகக் கலைக்கழகங்கள் செயற்படுகின்றன. அவ்வகையில் கூத்துக் கலைகள் தவிர்ந்த ஏனைய கலைகள் எல்லைக் கிராமங்களிலும் பின்பற்றப்படுகின்றன. ஆனால் கூத்துக் கலையானது பழுகாமம், கோவிற் போரதீவு, 40ம் கிராமம், களுமுந்தன் வெளி, மண்டூர் 14 (கணேசபுரம்) முதலிய கிராமங்களிலேயே ஆடப்பட்டன. ஆனால் இன்றுவரை (2018) பழுகாமம், கோவிற்போரதீவு முதலிய கிராமங்களிலேயே கூத்துக்கள் ஆடப்படுகின்றன.

தொடர்ந்து ஏனைய கலை நிகழ்ச்சிகளான கும்மி, கோலாட்டம், நாடகம், வில்லுப்பாட்டு. நடனம் முதலியவற்றை வளர்த்தெடுத்த கலைக்கழகங்களை எடுத்து நோக்குவோம். பழுகாமத்திலே பாஞ்சாலி கலைக்கழகம், கண்ணன் கலைக் கழகம், வெள்ளிமலையான் கலைக் கழகம், நாகர் கலைக்கழகம் முதலியன கலைப்பங்காற்றியுள்ளன. எனினும் இன்றுவரை (2018) தொடர்ந்து கலைப்பணி செய்து வருவன பாஞ்சாலி கலைக்கழகமும் கண்ணன் கலைக் கழகமுமேயாகும்.

**கவிஞர் ஆழிவேந்தன்** (திருப்பழுகாமம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்திபுரத்திலே சிவசக்தி கலா மன்றம், நாவலர் கலா மன்றம் என்பனவும் தும்பங்கேணியிலே கண்ணகி கலைக்கழகமும் திக்கோடையிலே சிவகலா மன்றமும் மண்டூர் 40ம் கிராமத்திலே ஐங்கரன் கலைக்கழகம், அம்பாள் கலைக்கழகம், இந்து இளைஞர் கலா மன்றம், ஸ்ரீ பராசக்தி முற்போக்கு மன்றம் என்பனவும் மண்டூர் 39ம் கிராமத்திலே கூழாவடி சித்திவிநாயகர் கலைக்கழகமும் மண்டூர் 38ம் கிராமத்திலே கண்ணகி கலா மன்றமும் களுமுந்தன்வெளியிலே விநாயகர் கலைக்கழகமும் அந்தந்தப் பகுதிகளில் இன்றும் கலைத் தொண்டாற்றி வருவதாக அறியக்கிடக்கின்றது.

கோவிற்போரதீவிலே உதய தாரகை கலைக்கழகம், இளைஞர் எழுச்சி ஒன்றியம் என்பனவும் பாலையடி வட்டையிலே விநாயகர் கலைக்கழகமும் கலைத் தொண்டாற்றுவதை நாம் அறிய முடிகின்றது.

எமது பிரதேசத்திலே மேலும் பல மன்றங்களும் கலைக்கழகங்களும் தோன்றி கலைத் தொண்டாற்றி வந்தாலும் அவை காலவோட்டத்தில் செயற்பட முடியாமல் போயுள்ளன. இதற்கான காரணம் இதை ஊக்குவிற்பதற்கான துறைசார், முயற்சி சார் அமைப்புக்கள் எதுவுமே இல்லாமையாகும். எனவே எமது பிரதேசத்தின் கலைப்பயணத்திற்கான முயற்சியை நாம் அனைவரும் சேர்ந்து செய்யும் போது பாரிய ஒரு வளர்ச்சியை இன்றைய இளைஞர்கள் மத்தியில் உருவாக்கலாம்.



ஏனெனில் இன்றைய சினிமாக் கேளிக்கைகளுக்கு அடிமையாகியுள்ள எமது இளைஞர்களுக்கு கிராமியக் கலைகள் எமது உயிர்க்கலை, பண்பாட்டின் அடையாளம் என்பதை உணரச் செய்து கலை வளர்ப்போம். கலை காப்போம். கலையை மலையாய் உயர்த்துவோம்.

தகவல் பெற்றுக்கொண்டோர் விபரம்

01). திரு த.திருவருட் செல்வன்.
(அதிபர், மட்/பட்/மண்டூர் 39, அ.த.க. பாடசாலை.

02). திருமதி கு.சுதாகரன்
(ஆசிரியை, மட்/பட்/மண்டூர் 39, அ.த.க. பாடசாலை.)

03). திரு இ.கோணேஸ்பரன்,
(ஆசிரியர், மட்/பட்/மண்டூர் 38 அகத்தியர் வித்தியாலயம்.

04). கவிஞர் கோவிலூர் தணிகா

05. திரு வ.சக்திவேல் (ஊடகவியலாளர்)

06). திரு அ.பிரபாகரன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரதீவுப் பற்றின் உடைப் பாரம்பரியமும் தற்காலமும்



ஈழத் திருநாட்டிலே கிழக்கு மாகாணத்தில் படுவான்கரையிலே வடக்கே மாவேற்குடா ஆற்றினையும் கிழக்கே மட்டக்களப்பு வாவியினையும் தெற்கே வேப்பையடித் திடல்(அம்பாறை மாவட்ட எல்லை) மேற்கே வக்கியெல்ல எனும் அம்பாறை மாவட்ட எல்லையினையும் தமது எல்லைகளாக கொண்ட சுமார் 180 சதுர கிலோ மீற்றர்களை பரப்பளவாகக் கொண்ட ஒரு அழகிய மருத நிலப்பரப்பே போரதீவுப்பற்று ஆகும். இப் பிரதேச அமைப்பானது 43 கிராம சேவகர் பிரிவுகளையும் சுமார் 130 கிராமங்களையும் கொண்டமைந்துள்ளது. இப் பிரிவின் மொத்த சனத்தொகை கிட்டத்தட்ட 45 000 ஆகும்.



கிழக்கு மாகாணத்தில் உள்ளடங்கி உள்ள 3 மாவட்டங்களுள் மையப்பகுதியில் எழில் கொஞ்சும் சிறப்புடன் விளங்குவதே மட்டக்களப்பு மாவட்டம். இம் மாவட்டத்தின் தெற்குப் பிரதேசமான களுவாஞ்சிகுடி பட்டிருப்புப் பாலத்தினைக் கடந்து மேற்காகச் சென்றால் வருவது போரதீவுப்பற்று (வெல்லாவெளி) ஆகும். ஈழத்திலே தமிழ் பாரம்பரியம் மிகவும் இறுக்கமாக பேணப்படும் இடமாக காணப்படுவது மட்டக்களப்பே ஆகும். படுவான்கரையின் தலை நகராகக் கொள்ளப்படுவது மட்டக்களப்பு நகரே ஆகும். எனவே தமிழர் பண்பாடு, கலாசாரம், பாரம்பரிய ஒழுக்க விழுமியங்கள் என்பனவற்றை இங்கு அவதானிக்கவும் முடிகிறது என்று கூறுவது மிகையாகாது. அந்த வகையிலே பாரம்பரியம் என்பது நமக்கு எமது முன்னோர்களிடமிருந்து கிடைத்த சொத்து என்று பொருள்படுகின்றது. இந்த சொல் பல்வேறுபட்ட விடயங்களையும் விளக்குவதற்கு பயன்படுகிறது. இந்தப் பாரம்பரியம் எந்தவித மாற்றங்களுமின்றி ஒரு தலைமுறையிடமிருந்து அடுத்த தலைமுறையினருக்கு கொடுக்கப்படுகிறது என்றும் கூறுகிறோம். இதை நாமும் அவ்வாறே அடுத்த சந்ததியினருக்கு கொடுப்போம் என்று நினைக்கின்றோம். இந்தப் பாரம்பரியந்தான் நம்முடைய பண்பாட்டையும் நாகரீகத்தையும் உருவாக்குகின்றது.

**செல்வி தயாபரன் ஜசோதினி** (பெரியபோரதீவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது மரபு என்பதற்கு வேறொரு விளக்கமும் அளிக்கப்படுகின்றது. கடந்த காலத்தில் வழக்கத்தில் இருந்ததாக நாம் கருதிய விடயங்களும் நம்முடைய தற்போதைய குறிக்கோள்களும் ஒன்றன்மீது ஒன்று தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அந்தவகையில் போரதீவுப்பற்றில் பாரம்பரியமாக வாழ்ந்துவந்த மக்களுடைய ஆடைக் கலாசாரமும் அதன் தற்கால மாற்றங்கள் பற்றியதாகவே இத்தலைப்பானது ஆராய்கின்றது. இனி அதை விரிவாகக்காண்போம்.

இங்கு போரதீவுப்பற்றுவாழ் மக்களுடைய பாரம்பரிய உடைகளாக வேட்டி, சால்வை, வாலாமணி, தலைப்பாகை, கொடுக்கு, கச்சை, காற்சட்டை, பனியன், மற்றும் பெண்கள் சேலை, தாவணிப்பாவாடை, நீளமான பாவாடை, சட்டை, உடுத்தாடை, மார்புக் கச்சை என அணிந்து வந்துள்ளனர். அக்கால கட்டங்களில் உயர் பதவிகள் வகித்தவர்களும் பாரம்பரியமான வேட்டி, சால்வை, வாலாமணி, தலைப்பாகை, சேலை என்பவற்றை அணிந்தே வேலைக்குச் செல்லும் வழக்கமும் இருந்துள்ளது.

போரதீவுப்பற்றில் தமிழர், சிங்களவர் என இரு மதத்தவர்களும் இந்துக்கள், பௌத்தர், கிறிஸ்தவர்கள் என மூன்று சமயத்தவர்களும் நல்லுறவுடன் வாழ்வதை காணமுடிகிறது. ஆரம்ப காலங்களில் அவரவர் தமது கலாசாரங்களுக்கு அமைய ஆடை அணிகலன்களை அணிந்து வந்துள்ளனர். முன்னைய காலங்களில் பாரம்பரியமான ஆடைகளின்றி வேறு உடைகளை அணிந்ததற்கான வரலாறு குறைவாகவே காணப்படுகின்றது.

அந்தக் காலத்து பெண்கள் பாரம்பரியமாக சேலையினையும், மார்புக் கச்சையினையும் (18 முழம் சேலையினை கொசுவம் வைத்து அணிவர்) அணிந்துள்ளனர். இவ் ஆடைக் கலாசாரமானது பின்னர் பல பரிணாமங்களைப் பெற்றதையும் காணக்கூடியதாகவுள்ளது. சிறுவர்கள் நீளமான பாவாடை, சட்டை என்பனவும், அதனைத் தொடர்ந்து வயதிற்கு வந்த பெண்கள் தாவணிப்பாவாடை, சேலை என்பனவும் திருமணமான பெண்கள் சேலை, சட்டை(சோட்டி), சாரிச்சட்டை எனப் பல ஆடைகளை அணியும் மரபும் காணப்பட்டது.

இவ் ஆடைகள் அனைத்தும் ஆரம்பத்தில் கரிக்கன் எனப்படும் ஒரு வகைத் துணியினாலும் பின்னர் நெசவு செய்யப்பட்ட துணியினாலும் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக இருந்தபோதிலும் 1975 – 1980 எனக் குறிப்பிடக்கூடிய காலப்பகுதியில் சினிமாவின் தாக்கத்தினால் பெண்களிடையே மினி ஸ்கேட் (குட்டைப் பாவாடை) எனும் ஆடைக்கலாசாரமானது அறிமுகமானதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வாறே ஆரம்ப காலங்களில் ஆண்களிடம் கொடுக்கு கட்டும் ஆடை மரபும் காணப்பட்டுள்ளது. அதாவது பூசாரிமார்கள், காவடி எடுப்போர் பிராமணக் கொடுக்கு எனப்படும் ஒரு வகையான கொடுக்கினையும் விவசாயிகள் மற்றும் ஏனைய வேலைகளைச் செய்வோர் கிராமியக் கொடுக்கு கட்டியதற்கான வரலாறும் உண்டு.


அதனைத் தொடர்ந்து சோதினக்கார ஐயா ( தற்காலத்தில் ISA) வாலாமணி மற்றும் தலைப்பாகை போன்ற ஆடைகளையே அணிவர். அத்துடன் கடுக்கன் என்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிகலனையும் அணிவார். அத்துடன் வியாபார நோக்கில் போரதீவுப்பற்றினுள் நுழைந்த முஸ்லிம்களாலும் தொழிலுக்காக முஸ்லிம் மக்கள் வசிக்கும் கிராமங்களுக்கு செல்லும் ஆண்களால் அவர்களது ஆடை மரபிலும் சிறு மாற்றம் ஏற்படலாயிற்று. அதாவது சிறுவால் எனப்படுகின்ற கட்டைக் காற்சட்டை அணியும் மரபு தொழிலாளர்களிடையே ஏற்பட்டது. இது வேலையினை இலகுவாகச் செய்வதற்கு உதவியாக இருந்தது.



இதன் பின்னர் காற்சட்டை, சேட், வெனியன், ரவுசர், ஜம்பர் என ஆடைக்கலாசாரமானது வளர்ச்சியடைந்ததையும் காணமுடிகிறது. ஆரம்ப காலங்களில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் வீட்டிற்கு போடும் ஆடையுடன் செல்லும் மரபும் பின்னர் வெள்ளை சீருடை நீலக் காற்சட்டை சேட் என மாற்றமடைந்ததையும் காணமுடிகிறது. இவ்வாறாக தமிழ் பண்பாடு காணப்பட்டதைப் போலவே சிங்களவர்கள் மற்றும் கிறிஸ்தவர்களது ஆடைக் கலாசாரமும் காணப்பட்டது. அந்த வகையில் சிங்கள ஆண்கள், சாரன் சேட் பெண்கள் லுங்கி போன்ற ஆடைகளை வீடுகளிலும் ஆலயங்கள் மற்றும் ஏனைய கலாசார நிகழ்வுகளுக்கு வெள்ளை நிற சாரி (ஒசரி), பாவாடை, சட்டை (லுங்கி), வெள்ளை நிறத்துண்டு (ஷோல்) என்பனவும் மரபாகக் காணப்பட்டது.



இதைப்போலவே கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் தமிழர்களை சார்ந்து வாழ்ந்ததனால் ஆண்களது ஆடைக் கலாசாரமானது தமிழ் ஆண்களைப் போன்றும் பெண்கள் சற்று வித்தியாசமாக குட்டைப்பாவாடை, சட்டை, திருமணத்தின்போது நீளமான வெள்ளை நிறச் சட்டை(பார்ட்டி புரோக்), சாரி என்பனவற்றைப் பயன்படுத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சமூகத்தில் மதிக்கத்தக்க நிலையில் இருந்த மதகுருமார்களது ஆடைக் கலாசாரமும் மதங்களுக்கு ஏற்ப மாற்றம் அடைந்தே காணப்பட்டது. பூசாரிமார் வேட்டி, பிராமணக் கொடுக்கு, சால்வை, கடுக்கன், உருத்திராட்ச மாலை என்பனவும், கிறிஸ்தவ பாதிரிமார்கள் மற்றும் சிங்கள பிக்குக்கள் அவர்களது கலாசாரத்தை வெளிப்படுத்தும் ஆடையினையும் அணிந்தனர்.

இவ்வாறாகக் காணப்பட்ட ஆடைக்கலாசாரமானது தற்காலத்தில் மாற்றம் கண்டுள்ளமைக்கான காரணங்களில் தொழில் நுட்பத்துறையில் நிகழும் புதிய கண்டுபிடிப்புக்கள், சமூக பொருளாதார மாற்றங்களுக்கேற்ப மக்கள் தங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்திக் கொள்ளும் மாற்றங்கள் என்பவையும் கவனிக்கத்தக்கது. மேலும் சினிமாவின் தாக்கம், வெளிநாட்டவர்களின் வருகையின் தாக்கம், வெளிநாட்டுக்கு செல்லும் மோகம் என்பவற்றையும் குறிப்பிடலாம். இவ்வாறாக ஆள் பாதி ஆடைபாதி என்னும் முதுமொழிக்கு அமைவாக ஆடைக் கலாசாரமானது மாற்றமடைவதைக் கண்ட போரதீவுப்பற்றின் புகழ்பூத்த கலைஞன் விநாயகமூர்த்தி (கூழாவடியான்) அவர்களால் சிந்தித்துப்பார் எனும் தலைப்பில் ஓர் கவிதை படைக்கப்பட்டுள்ளது. அதனை இங்கு காணலாம்.

குதி உயர்ந்த செருப்பதனை கொளுவிக்கொண்டு
கொண்டையிலே மலர் வளையம் ஒன்றை வைத்து
இதழழகு நிறங்காட்ட மையைத் தீட்டி
இடுப்பதனை அரை அடிக்கு மேலே காட்டி
அடையாளம் யாரென்று புரியாவண்ணம்
அழகுமிகு புன்னகையை சிந்திக்கொண்டு
குடையொன்று புகுந்தேகும் குமரிப் பெண்ணே
உன் குலமுறையிது தானோ சிந்தித்துப்பார்

வடை கொண்டை ஒன்றதனை வாகாய் மாட்டி
வளைந்த மயிர் மாட்டி அதன் மேலே பூட்டி
எடை போடக் கண்ணாடி முன்னே நின்று
எத்தனையோ முறையழித்து திலகம் தீட்டி
நடக்கின்ற நாகரீக வெறி மேலீட்டால்
நைலோனால் இடைதன்னை சுற்றி விட்டால்
உடலெல்லாம் மறைந்து விட்ட எண்டு எண்ணம்
உரிய முறை இதுதானோ சிந்தித்துப்பார்

வட்ட வெட்டு கழுத்துடைய சட்டை போட்டு
வளர் மார்பு மறையாது வடிவு காட்ட
கட்டக் கையங்கி தரும் கவர்ச்சி கூட
கத்தரித்துக் கோலஞ்செய் கன்னிப்பெண்ணே
பட்டிக்கே உதவாத பசுவாய் நீயும்
பாய்தெட்டி ஓடுகின்ற ஈனச் செய்கை
விட்டதனை கழியாத விந்தையேனோ
வெளிவேடம் சரிதானோ சிந்தித்துப்பார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு கவிஞன் இன்றைய காலகட்டத்தில் பெண்களுடைய ஆடைப் பாரம்பரியமானது கண்டுள்ள மாற்றத்தை மிகவும் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

அத்தோடு மிகவும் கவனஞ் செலுத்தவேண்டிய இன்னுமொரு விடயம் யாதெனில் இன்றைய நவீன மயமானதும் இயந்திரமயமானதுமான உலகில் சில இடங்களில் தேவை கருதியே ஆடைகளை அணியவேண்டிய சந்தர்ப்பம் உள்ளது. உதாரணமாக மேசன் ஒருவன் வேட்டி கொடுக்கு என்பவற்றை அணிந்து கொண்டு வேலைகளைச் செய்வதும் உடற்பயிற்சி நிலையத்தில் (Gym center) ஆண்களோ சரி பெண்களோ சரி பாரம்பரியமான ஆடைகளை அணிந்தபடி உடற் பயிற்சிகளையோமேற்கொள்வது பொருத்தமற்றதாகவே கொள்ளப் படுகின்றது.

எனவே பாரம்பரியமான ஆடைக் கலாசாரம் இன்று மாற்றமடைவதால் பல தீங்குகள் நிகழ்ந்தாலும் புதுத் தலைமுறைகள் ஒன்று உருவாகும்போது சில மாற்றங்களும் நிகழ்ந்துதான் ஆகவேண்டியுள்ளது என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை.

தற்கால சூழலில் சில சமூக சீர்கேடுகள் நிகழ்வதற்கும் துஸ்பிரயோகங்கள் நிகழ்வதற்கும் கூட ஆடை அணியும் முறைகளே காரணம் என முக நூலில் பல செய்திகளை பலருடைய மன ஆதங்கங்களையும் பார்த்ததுண்டு. அவர்களிடம் நான் வினவுவது என்னவென்றால் பல வயதுப் பெண்கள் பாலியல் ரீதியாக துஸ்பிரயோகம் செய்யப்படுவதற்கு அவர்கள் அணியும் ஆடை அரைகுறையாக இருப்பதும் அதன்பால் அவர்கள் கவர்ச்சியை வெளிப்படுத்தவே அவர்கள் துன்புறுத்தப்படுகின்றார்கள். எனவே ஆடையே இந் நிலையை உருவாக்கியது எனக் கூறும் கூற்று உண்மையெனில் பல சிறுவர்கள் ( 4 வயதிற்குட்பட்ட சிறுமியும் கூட) துஸ்பிரயோகம் செய்யப்படுவதற்கு எந்த ஆடை அணிவதும் கவர்ச்சி காட்டுவதும் காரணமாய் உள்ளது? பாரம்பரியமான சேலையினை அணிந்தவர்கள் துஸ்பிரயோகம் செய்யப்படவில்லையா? பாடசாலைச் சீருடையுடன் துன்புறுத்தலுக்கு ஆளாகும் சிறுமிகள் எவ்வாறு கவர்ச்சியைக் காட்டுகின்றனர்? என இவ்வாறு பல கேள்விகளை எழுப்பிக்கொண்டே போகலாம்.
எனவே மேலே கூறிய கருத்துக்களின் படி ஆடைக் கலாசாரமானது பல்வேறு வகையான மாற்றங்களை காலத்தின் தேவைக்கேற்ப கண்டு உள்ளதனையும் சில கலாசாரத்தை சீரழிக்கும் நபர்களும் உள்ளனர் என்பதனையும் விளங்கிக்கொள்ள முடிகிறது. அந்த வகையில் சில மாற்றங்களை எதிர்வுகொள்ளவேண்டிய நிர்ப்பந்த சூழலில் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம் என்பதனையும் சில மாற்றங்கள் பல நன்மையினையும் தீமையினையும் ஏற்படுத்தக் கூடியது என்பதை புரிந்து கொள்வதும், அதற்கிணங்க செயலாற்றுவதும் அவசியமானதும் மறுக்கப்படமுடியாததுமான உண்மை என்பதுவும் இங்கு தெள்ளத் தெளிவாக புலனாகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிப் பாடல்

## - அன்றும் இன்றும் -

(களவெட்டிப் பொங்கல் விழா, பிரதேச செயலகம் போரதீவுப்பற்று)

பொலி பொலி சாமி பொலி தம்பிரானே பொலி
பூமாதேவித்தாயே பொலி மண்ணின் களமே மாதாவே
வளர் பூமி நிறைகளமே மாதாவே தாயே பொலி
பூமகளே பூமிதேவித் தாயே பொலி பொலி பொலியோ
ஒகோ கோ கோ கோ கோ கோ

பொறுமையுள்ள மாதாவே எங்கள்
பூமாதேவித் தாயாரே பொலியம்மா பொலியோ
ஒகோ கோ கோ கோ கோ
ஒகோ கோ கோ கோ கோ

உணவளிக்கும் மாதாவே - எம் தாயே பொலி
நில மகளே பொலியம்மா பொலியோ
ஒகோ கோ கோ கோ கோ
ஒகோ கோ கோ கோ கோ

பொங்கலிட்டு பூசை வைத்தோம் எம் தாயே பொலி
களம் நிறையப் பொலியம்மா பொலியோ
ஒகோ கோ கோ கோ கோ
ஒகோ கோ கோ கோ கோ

உயிர்களைக் காக்கும் தாயே - பொலியம்மா நீ
உடல்களை உட்கொள்வாய் பொலியோ
ஒகோ கோ கோ கோ கோ
ஒகோ கோ கோ கோ கோ

கந்தருக்கு முன் பிறந்தார் எம் தாயே பொலி
கணபதியார் முன்னடக்கப் பொலியோ
ஒகோ கோ கோ கோ கோ
ஒகோ கோ கோ கோ கோ

**கலாபூஷணம் க. தணிகாசலம்** (திருப்பழுகாமம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரக்குப் பதித்து வைத்தோம் - எம் தாயே பொலி
எங்கள் அன்பான வயிரவர்க்குப் பொலியோ
ஒகோ கோ கோ கோ கோ
ஒகோ கோ கோ கோ கோ

களவட்டிப் பொங்கல் படைத்தோம் - எம் தாயே பொலி
எங்கள் கலாசாரம் தான் மதித்தோம் பொலியோ
ஒகோ கோ கோ கோ கோ
ஒகோ கோ கோ கோ கோ

வாரிக் காலித் தொடுகையம்மா - போர் மதிக்கும்
வடிவழகைப் பாரம்மா பொலியோ
ஒகோ கோ கோ கோ கோ
ஒகோ கோ கோ கோ கோ

அரக்கு மாடார் நடுச்சுழல - எம் தாயே பொலி
தொடுவை மாடார் சுற்றுவரப் பொலியோ
ஒகோ கோ கோ கோ கோ
ஒகோ கோ கோ கோ கோ

பொலி பொலியாய் நிறையுதம்மா - எம் தாயே பொலி
பொலிக்கொடியும் வேறாகுதம்மா பொலியோ
ஒகோ கோ கோ கோ கோ
ஒகோ கோ கோ கோ கோ

கன்றுப் பனையோலையம்மா - எம் தாயே பொலி
கந்தருக்கு கணக்கெழுத நல்லோலை பொலியோ
ஒகோ கோ கோ கோ கோ
ஒகோ கோ கோ கோ கோ

அவுரிகட்டித் தூற்றிடுவோம் - எம் தாயே பொலி
கணக்கன் கொண்டளந்து விடுவோம் பொலியோ
ஒகோ கோ கோ கோ கோ
ஒகோ கோ கோ கோ கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவணம் அவணமாய் அளப்போம் எம் தாயே பொலி
அளந்திடுவோம் கோணியிலே பொலியோ
ஒககோ கோ கோ கோ கோ
ஒககோ கோ கோ கோ கோ

களம் நிறையப் பொலியம்மா பூமாதேவித்தாயே
எங்கள் குலம் வாழப் பொலியம்மா பொலியோ
ஒககோ கோ கோ கோ கோ
ஒககோ கோ கோ கோ கோ

வாழிய வாழிய தாயாரே எங்கள் என்னை
நிலமகளே வாழியவே
போர்மிதிக்கும் கால் நடைகள் எங்கள்
ஊர் காக்கும் விவசாயிகள்
வாழிய வாழிய தாயாரே எங்கள்
பஞ்ச பூதங்கள் வாழியவே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமியப் பாடல் :

# வான் மழை பொழியுமா ....?

ஒரு விவசாயியின் ஏக்கம்

தாளம்: தந்தனம் தானாத் தெய் தானாத் தன்னானே - தனத்
தானித்தம் தானாத் தெய் தானத்தன்னானே

பாடல்: வான் இருண்டு மழை பொழிய வேண்டுமே சுவாமி - எங்கள்
வருணேஸ்வரா வந்து வரம் தந்திடு சுவாமி
வயல் வளங்கள் வரட்சியினால் கருகுதே சுவாமி எந்தன்
வேண்டுதலை ஏற்று மழை பொழிந்திடு சுவாமி - தந்தனம்

பொண்டாட்டியின் தாலிக்கொடி அடகு வைச்சேனே - என்ர
புள்ள குட்டி மாலை காப்பு ஈடு வைச்சேனே
வட்டிக்கின்னும் கடன் வாங்கி வயலைச் செய்தேனே - வயல்
வரட்சியினால் வாடுவதை கண்டு நொந்தேனே - தந்தனம்

நில மகளை நம்பியல்லவா நெல்லை எறிந்தேன் நான் - அந்தக்
குல தெய்வம் உனை வேண்டி அழுகிறாள் சுவாமி
சலசலென மழைபொழிய வேண்டுமே சுவாமி - என்ர
குடலை வயல் சாகாமல் காத்திடு சுவாமி - தந்தனம்

ஆயிரத்து எட்டு இளநீர் சொரிகின்றேன் - உன்னை
அபிடேகம் செய்து மழைக் காவியம் இசைப்பேன்
என்னுடைய வயல் வளத்தைக் காத்திடு சக்தி - இந்த
ஏழை விவசாயி கரம் உயர்த்திடு சக்தி - தந்தனம்



**செல்வி இளங்கோ மதுராகினி** (திருப்பழுகாமம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடுங்கடா காளைகளே உளம் நோகுதே – என்ர
உணர்வெல்லாம் வயலுக்குள்ளே கிடந்து சாகுதே
கரடு முரடான இந்தப் பாதை தனிலே – இந்தக்
கரத்தைதனை இழுத்துக் கவனமாய் நடங்கடா – தந்தனம்

எல்லா உயிர்க்கும் உணவளிக்கும் வயல் விளையணும் – உங்கள்
வாயசைக்கும் வைக்கோலும் தான் விளையணும்
செல்லமான காளைகளே புரியும் உங்களுக்கு – எங்கும்
நல்ல மழை பொழிய வரம் வேண்டும் எங்களுக்கே – தந்தனம்

வேளாண்மை ஓலையெல்லாம் கருகத் தொடங்குதே – சில
வேளை போனால் எல்லாமே செத்துப்போகுமே
வானை நோக்கி கண்ணீர் விடுவோம் செல்லக் காளைகளே – எங்கள்
வயல் நிறை மழைபொழிய வேண்டிக் கும்பிடுவோம் – தந்தனம்

வான் இருண்டு கருமேகம் சூழ்ந்து வருகுதடா – என்ர
மனத்திரையில் மகிழ்ச்சி வெள்ளம்தான் பொங்குதடா
காளைகளே மழை மழையாய் பொழிந்து தள்ளுதடா – நம்ம
வேண்டுதலை வருண பகவான் ஏற்றுக் கொண்டாரடா – தந்தனம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை அழகு

நீள் நுதல் நெற்றிதனில்
நேர்த்தியான பொட்டு வைத்து
பார்புகழ் பாவை வந்தாள்
பார்த்திடக் கொள்ளை அழகு

நேரிடை வானின் மீது
நெஞ்சத்தை கொள்ளை கொள்ளும்
வெண்நிற மதியும் வந்தாள்
எத்தனை அழகு அழகு

மாணிக்கம் மலையின் மீது
மரகத சீலை போன்று
வானுயர் சோலை கண்டேன்
வாழ்த்துவன் இயற்கை அழகு

ஏரியில் கலப்பதற்கோ
எத்தனை வாய்க்கால் நீர்கள்
நாகரீகத்தை போன்றே வளையும்
நளினமோ அழகே அழகு

தாமரைக் குளத்தில் நீந்தும்
தங்கத்தின் நீளத்தைப் போலும்
பூமகள் நடையைப் போன்ற
அன்னத்தின் அசைவோ அழகு

தென்னையின் கீற்றில் தவழ்ந்தே
தென்றலின் ஓசை தந்த
எண்ணற்ற இனிய ராகம்
எத்தனை அழகோ அழகு

வான்கடல் பூமி சோலை
வாவிநீர் குளங்கள் ஏரி
தேன் சுவை தந்த இயற்கை
தெவிட்டாததின்ப அழகு

கருமேகம் காற்றில் புணர்ந்து
கருக்கூட்டி வந்த சீவு நீர்
பூமியில் மழையாய் பொழியும்
புதினமோ மேலும் அழகு

அழகுக்கே அழகு சேர்க்கும்
அமுதப்பால் சட்டி போன்றே
இரவினில் வானில் நீந்தும்
புரவியின் தூய்மை அழகு

இத்தனை அழகு கொஞ்சும்
இனிதோர் பாரில் நம்மை
மொத்தமாய் படைத்து காக்கும்
கடவுள் தான் அழகின் சிகரம்



**கவிஞர் அழகரசு கோ. கணேஷ்** (சமுர்த்தி அபிவிருத்தி உதியோகத்தர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவம் பெறும் கலைஞர்கள்



**முழுப்பெயர் - கணபதிப்பிள்ளை பாலசுந்தரம்**


**பிறந்த திகதி – 1949.09.02**

**முகவரி – பிள்ளையார் கோயில் வீதி,**
**நாகஞ்சோலை,**
**தம்பலவத்தை.**

**கலைத்துறை – அண்ணாவியார், மாந்திரீகம்.**

மேற்குறிப்பிடப்பட்டு கூறப்படும் கலைஞர் தமது பெற்றோர், மரபு வழியில் பின்தொடர்ந்து வந்த கலைஞராவார். இவர் தமது சிறுவயது முதல் கூத்துக்களையும், கரகங்களையும் பார்த்து மகிழ்வதில் நாட்டமுள்ளவராக காணப்பட்டார். இதனால் இக் கலைத்துறையில் தம்மை ஈடுபடுத்தி கூத்துக்களை நடித்தும் கரகம் போன்ற கலைத்துறையை பழக்கிய பெருமைக்குரியவராக திகழ்ந்தார்.

இவர் சித்திர புத்திரனார், தரும புத்திரனார், வாழ வீமன் போன்ற கூத்துகளையும் வசந்தன் மற்றும் கரகம் போன்ற கூத்து வகைகளை பழக்கியும் இப் பிரதேசத்தின் கலைத்துறையை மிளிரச் செய்த அரும்பெரும் கலைஞராவார். இவரின் கலைத்துறையைப் பாராட்டி இக் கலாசார விழாவின்போது கௌரவத்தினை வழங்கி போரதீவுப்பற்று பிரதேச கலாசார பேரவை பெருமகிழ்வடைகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவம் பெறும் கலைஞர்கள்



**முழுப்பெயர் – கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்**


**பிறந்த திகதி – 1961.04.16**

**முகவரி – ஒல்லிமடு, மண்டூர் – 01**

**கலைத்துறை – கூத்து மத்தளம், அண்ணாவியார்**

மேற்படி கலைஞர் தமது 18 வயதிலிருந்து கூத்துக் கலையில் ஆர்வம்கொண்டு நடிக்க ஆரம்பித்ததுடன் பல கூத்துக்களுக்கு மத்தளம் அடிக்கும் கலையிலும் ஈடுபட்டார். இவர் தமது தந்தை வழியில் கலைத்துறையில் பின்தொடர்ந்த கலைஞராவார்.

இக் கலைஞர் குருகேத்திரன் போர், வைகுந்தம், அனுருத்திரன் நாடகம் போன்ற கூத்துக்களில் நடித்ததோடு பல கூத்துக்களுக்கு மத்தளம் வாசிப்பதிலும் ஈடுபட்டு வந்தவர். இவ்வாறு அருகிவரும் இக் கூத்துக்கலையை புத்துயிர் கொடுத்து கட்டிக்காத்த பெருமைக்குரிய இக் கலைஞரைப் பாராட்டி இக் கலாசார விழாவின்போது கௌரவப்படுத்துவதில் போரதீவுப்பற்று பிரதேச கலாசார பேரவை மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவம் பெறும் கலைஞர்கள்



**முழுப்பெயர் – முத்துப்பிள்ளை அம்பலவாணப்பிள்ளை**


**பிறந்த திகதி – 1954.09.18**

**முகவரி – திருப்பழுகாமம் – 02**

**கலைத்துறை – நாடகம், சல்லாரி வாத்தியம் வாசித்தல் மற்றும் சமூக சேவை போன்ற துறைகள்**

மேற்கூறப்படும் கலைஞர் திருப்பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்றவர். பாடசாலை கல்வி காலத்தில் நடிப்புத்துறையில் ஆர்வம் காட்டியவர். இவர் கல்விக்காலத்திலும் திருப்பழுகாமம் அண்ணா கலாமன்றக் கலைஞராக இருந்து பல சமூக, நகைச்சுவை நாடகங்களை நடித்து பிரபல்யம் அடைந்த பெருமைக்குரியவர்.

பின்னர் திருப்பழுகாமம் பாஞ்சாலிக் கலைக்கழகத்தில் இணைந்து பல்வேறு நாடகங்களில் நடித்தும் மேடைக் கூத்துக்களில் ஆடியும், அரங்கேற்றியும் பாராட்டைப் பெற்றவர். மேலும் சல்லாரி வாத்தியம் வாசிப்பதில் சிறந்த கலைஞராகவும் திகழ்ந்தார். அத்துடன் கிராமங்களில் இடம்பெறும் பல்வேறு சமூக பணிகளில் ஈடுபடும் இக்கலைஞர் தற்போதும் திருப்பழுகாமம் விபுலாநந்தா சிறுவர் இல்ல நிருவாகத்தில் இணைந்து இல்லத்து குழந்தைகளைப் பராமரிக்கும் பணியிலும் ஈடுபட்டுவருகின்றார். இவ் விழாவில் இக்கலைஞரைப் பாராட்டி கௌரவிப்பதில் போரதீவுப்பற்று பிரதேச கலாசார பேரவை பெருமகிழ்ச்சியடைகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவம் பெறும் கலைஞர்கள்




**முழுப்பெயர் – கறுவல்தம்பி சுந்தரம்பிள்ளை**
**பிறந்த திகதி – 1954.05.18**
**முகவரி – தபால் அலுவலக வீதி, வெல்லாவெளி**
**கலைத்துறை – உடுக்கை, கூத்து, மத்தளம் வாசித்தல்**

மேற்படி கலைஞர் வெல்லாவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 5ம வகுப்பு வரை கல்வி கற்றவர். இவர் தனது தகப்பன் வழியில் கலைகளைப் பின்தொடர்ந்த கலைஞர் ஆவார்.

இவர் பூர்வீக சக்கரவர்த்தி, இராம நாடகம், அல்லி திருமணம் போன்ற வடமொழி கூத்துக்களுக்கு அண்ணாவியாராகச் செயற்பட்டதுடன் உடுக்கை அடிப்பதிலும் தேர்ச்சிபெற்ற கலைஞராக திகழ்கின்றார். தற்போதும்கூட தனது கலை வாழ்க்கையில் 30 வருடங்களாக வெல்லாவெளி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் பூசை நேரங்களின் உடுக்கை வாசிப்பவராக திகழ்ந்து வருகின்றார்.

எனவே போரதீவுப்பற்று பிரதேசத்தில் கலைத்துறை மேம்பாட்டிற்காக தம்மை ஈடுபடுத்தி, அர்ப்பணித்து கொண்டு வரும் இக் கலைஞரைப் பாராட்டி கௌரவப்படுத்துவதில் போரதீவுப்பற்று கலாசார பேரவையானது மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவம் பெறும் கலைஞர்கள்



**முழுப்பெயர் – அந்தோணிப்பிள்ளை சுலோசன்**
**பிறந்த திகதி – 1967.09.13**
**முகவரி – 37/96 பாலையடிவட்டை,**
**வக்கியெல்ல.**
**கலைத்துறை – சிற்பக்கலை.**

மேற்படி கலைஞர் பாலையடிவட்டையை வசிப்பிடமாகக் கொண்டு மரத்திலாலான சிற்ப வேலைப்பாடுகளை திறமையாக செய்து வரும் கலைஞராவார்.

இவர் பல்வேறு பிரதேசங்களுக்கும் தமது மரச் சிற்பங்களை விநியோகித்துவருகிறார். இந்த வகையில் மூஷிகம், எருது, மயில், சூரன் போன்ற தெய்வங்களின் வாகனங்களை வடிவமைத்து செதுக்கி பல்வேறு ஆலயங்களுக்கு வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. தற்போதும் இக்கலையை தன் சீவனோபாய கலையாக செய்துவருகிறார்.

கலைப்பணியில் தொடர்ந்து செயற்பட்டு வரும் இக் கலைஞரைப் பாராட்டி கௌரவிப்பதில் போரதீவுப்பற்று கலாசார பேரவையானது மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவம் பெறும் கலைஞர்கள்



**முழுப்பெயர்** – **திருமதி.மாதம்மை பாலிப்போடி**

**பிறந்த திகதி** – **1948.01.01**

**முகவரி** – **கோவில்போரதீவு தெற்கு,**
**கோவில்போரதீவு.**

**கலைத்துறை** – **கிராமிய மருத்துவிச்சி**

மேற்குறிப்பிட்ட அம்மையார் தனது தாயார் சின்னத்தம்பி கற்பகம் அவர்களது தாய்வழி வந்த ஒரு கிராமிய மருத்துவிச்சியாவார். நவீன மருத்துவ வசதிகளற்ற காலத்தில் இவரது மருத்துவம் பெரிதும் இப்பிரதேச மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது.

இவர் 1980ம் ஆண்டு முதல் இரவு பகல் பாராது ஊதியம் எதுவும் பெறாது மகப்பேற்று பிரசவ மருத்துவிச்சியாக தனது தாய், பாட்டி ஆகியோரது ஆசீர்வாதத்துடனும் பிரசவம் பார்த்திருக்கின்றார். மேலும் தான் பிரசவம் பார்த்த சுமார் 28 வருட காலத்தில் 500 க்கு மேற்பட்ட குழந்தைகள் இப்பூவுலகில் சுகப் பிரசவமாப் பிறக்க தனது பணியைச் திறம்படச் செய்துள்ளதாகவும், தற்போது கண் பார்வையும் குறைந்து நலிவுற்றுவிட்டதாகவும் தனது ஆதங்கத்தைத் தெரிவிக்கின்றார்.

இவர் போரதீவுப்பற்றுச் சமூகத்திற்கு செய்த அளப்பரிய சேவையைப் பாராட்டுவதுடன் இந்நாளில் அவரைக் கௌரவப் படுத்துவதில் போரதீவுப்பற்று கலாசாரப்பேரவை பெருமகிழ்வடைகிறது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச மட்ட மற்றும் மாவட்ட மட்ட இலக்கிய விழா - 2018 / 2019

## பாலர் பிரிவு :

01. கையெழுத்துப் போட்டி :

| | | |
|---|---|---|
| 1. ஸிகேலகுமார் ரிவாஷகி | மட்/பட்/இராமகிருஸ்ண வித். | 1ம் இடம் |
| 2. அரசரெத்தினம் வுவிஸ்கா | மட்/பட்/இராமகிருஸ்ண வித். | 2ம் இடம் |
| 3. கிருபைராசா டிவோசனா | மட்/பட்/திக்கோடை கணேசா வித். | 3ம் இடம் |

## சிறுவர் பிரிவு

01. கவிதை பாடல் :

| | | |
|---|---|---|
| 1. ஸ்ரீதரன் கேதுகா | மட்/பட்/மண்டூர் மகா வித். | 1ம் இடம் |
| 2. சசிந்திரன் ருசாந்தன் | மட்/பட்/மண்டூர் மகா வித். | 2ம் இடம் |
| 3. டுரஸ்வரன் அவிலாஜினி | மட்/பட்/களுமுந்தன்வெளி மகா வித். | 3ம் இடம் |
| 04. கோபாலசிங்கம் தனேஸ்கரன் | மட்/பட்/வெல்லாவெளி மகா வித். | 3ம் இடம் |

02. கையெழுத்துப்போட்டி :

| | | |
|---|---|---|
| 1. புஸ்பராசா பிரகவி | மட்/பட்/இராமகிருஸ்ண வித். | 1ம் இடம் |
| 2. கனகசபை சேசகியா | மட்/பட்/இராமகிருஸ்ண வித். | 2ம் இடம் |
| 3. பூரணகுமார் ஸதுஸ்கா | மட்/பட்/இராமகிருஸ்ண வித். | 3ம் இடம் |

## கனிஷ்ட பிரிவு

01. கட்டுரைப்போட்டி :

| | | |
|---|---|---|
| 1. விஜயேந்திரன் கரோலின் | திலகவதியார்மகளீர் இல்லம் பழுகாமம் | 1ம் இடம் |
| 2. கணேசலிங்கம் கம்சனா | மட்/பட்/திக்கோடை கணேசா வித் | 2ம் இடம் |
| 3. ஆறுமுகம் பவப்பிரியா | மட்/பட்/மண்டூர் மகா வித். | 3ம் இடம் |
| 4. ஜெயரதன் பூஜிதா | மட்/பட்/இராமகிருஸ்ண வித். | 3ம் இடம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. கவிதை எழுதுதல் :

| | | |
|---|---|---|
| 1. செல்வரெட்ணம் துதுஜனன் | மட்/பட்/இராமகிருஸ்ண வித். | 1ம் இடம் |
| 2. விஜயகுமார் தனுஷ்க்கா | மட்/பட்/திக்கோடை கணேசா வித் | 2ம் இடம் |

## 03 கவிதைப் பாடல் :

| | | |
|---|---|---|
| 1. கணேசமுர்த்தி யதுர்சா | மட்/பட்/பழுகாமம் கண்டுமணி ம.வித். | 1ம் இடம் |
| 2. தருமராசு சலோமியா | மட்/பட்/மண்டூர் மகா வித். | 2ம் இடம் |
| 3. மகேந்திரன் பிரதிஸ்கா | மட்/பட்/பெரியபோரதீவு பாரதி வித். | 3ம் இடம் |

# சிரேஷ்ட பிரிவு

## 1. கட்டுரை போட்டி :

| | | |
|---|---|---|
| 1. தேவராஜன் தேனுஜா | விபுலானந்தபுரம் பழுகாமம் | 1ம் இடம் |
| 2. இராசதுரை போமிதா | மாவேற்குடா பழுகாமம் | 2ம் இடம் |

## 2. நாடகப் பிரதி எழுதுதல் :

| | | |
|---|---|---|
| 1. புவனேந்திரராசா தருமரூபி | களுமந்தன்வெளி அம்பிளாந்துறை | 1ம் இடம் |

**இப்போட்டிகளில் வெற்றியீட்டிய அனைவருக்கும்**
**போரதீவுப்பற்று கலாசார பேரவை**
**வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரதீவுப்பற்று பிரதேச மக்களின்
கலாசாரத்தினையும் பண்பாட்டினையும்
பேணிப்பாதுகாக்க இக் கலாசார விழா வழிசமைக்கட்டும்.



# லாவண்யா ஜுவெல்லரி

**வைத்தியசாலை வீதி,**
**களுவாஞ்சிகுடி.**
**தொ.பே.: 065 2250048, 065 2251263**

---

**போரதீவுப்பற்று பிரதேச 2018ம் ஆண்டுக்கான**
**பிரதேச கலாசாரவிழா சிறப்பாக நடைபெற**
**வாழ்த்துகிறோம்**

**உரிமையாளர் - திருமதி. வே. பரமேஸ்வரி அவர்களும்**
**ஊழியர்களும்**

# லங்கா நிரப்பு நிலையம்

**தம்பலவத்தை, மண்டூர்.**
**தொ.பே.: 065 2250508**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போரதீவுப்பற்று பிரதேச 2018ம் ஆண்டுக்கான பிரதேச கலாசாரவிழா சிறப்பாக நடைபெற பங்களிப்புச் செய்த ஆர்வலர்கள்.

| | |
|---|---|
| 02. நா.ஜெயகாந்தன் | N.G ஸ்டோர்ஸ் |
| 03. S.R. ஜீவலரி | கோவில்போரதீவு |
| 04. ஸ்ரீ அருள் ஜுவலரி | கோவில்போரதீவு |
| 05. ம. கோபிநாத் | திவார்த்தகி, துவாரகி மல்டி சொப், கோவில்போரதீவு. |
| 06. க.செல்வநாயகம் | களுதாவளை - 05 |
| 07. அ.அன்பழகன் | பெரியபோரதீவு |
| 08. பிருந்தா ஹாட்வெயார் | பெரியபோரதீவு |
| 09. S.T.N ஹட்வெயார் | வீரன்சேனை, பழுகாமம் 2 |
| 10. மதுரா ஜுவலரி | மண்டூர் |
| 11. சு.சதீஸ்குமார் | மண்டூர்- 1 |
| 12. பி.தெய்வேந்திரன் | மண்டூர் |
| 13. த.தங்கத்துரை | கோவில்போரதீவு |
| 14. S.N ஸ்டோர்ஸ் | தும்பங்கேணி |
| 15. கலை ஸ்டோர்ஸ் | திக்கோடை |
| 16. குணசேகரம் | திக்கோடை |
| 17. கணேஸ் ஹாட்வெயார் | பழுகாமம் |
| 18. க.சற்குணம் | பழுகாமம் |
| 19. தேவி ஜுவலஸ் | பெரியபோரதீவு |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகின்றேன்

❖ போரதீவுப்பற்று பிரதேச கலாசார பேரவை மற்றும் கலாசார அதிகார சபை என்பன கூட்டாக இணைந்து இவ்வருடம் இடம்பெறும் கலாசார விழாவிற்கான ஏற்பாடுகளையும், ஆலோசனைகளையும் வழங்கி விழா சிறப்புற அமைவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய இவ்விரு பேரவைகளுக்கும் எமது நன்றிகள்......

❖ கலாசார பேரவையின் கருத்துக்களுக்கேற்ப இவ்விழாவினை சிறந்த முறையில் திட்டமிட்டு எமக்கு ஆலோசனைகளையும், வழிகாட்டியும் நெறிப்படுத்திய பிரதேச செயலாளர் அவர்களுக்கு எமது நன்றிகள்......

❖ மேலும் கலாசார பேரவையின் உப தலைவராகவும், மலர்க்குழுவின் தலைவராகவும் இருந்து இவ்விழா மற்றும் மருதம் சிறப்பு மலரினை ஒழுங்குற அமைவதற்கு எனக்கு கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்கிய உதவிப் பிரதேச செயலாளர் அவர்களுக்கும் எனது நன்றிகள்......

❖ விழாவின் போது வெளிவரும் மருதம் சிறப்பு மலருக்கான ஆக்கங்களை திரட்டும்போது கலாசார பேரவையின் ஆலோசனைக்கமைய பிரதேச எழுத்தாளரிடமிருந்து ஆக்கங்கள் பெறப்பட்டது. எனவே, ஆக்கங்கள் எழுதி நூலினை அலங்கரிக்க உதவிய எழுத்தாளர்களுக்கு எமது நன்றிகள்......

❖ "வாழும் போது வாழ்த்தி கௌரவிப்போம்" என்பதற்கமைய இவ்விழாவின் போது கௌரவம் பெறுவதற்கு கலாசார பேரவையினால் தெரிவு செய்து கௌரவம் பெறும் கலைஞர்களுக்கு எமது நன்றிகள்......

❖ மேலும் இவ்விழாவில் வெளிவரும் மருதம் சிறப்பு மலரினை சிறந்த முறையில் நூலுருவாக்கம் செய்வதற்கு வழமைபோல் நிதி அனுசரணை வழங்கிய லாவண்யா நகைமாளிகை, அதன் உரிமையாளரான திரு.செ.பாக்கியராசா அவர்களுக்கு எமது நன்றிகள்...

❖ மேலும் விழா சிறப்புற அமைவதற்கு நிதி பெற்றுக்கொள்ளும் முகமாக வர்த்தகர்கள் மற்றும் கொடையாளிகளிடம் நாடிய போது மனமுவந்து வழமைபோல் நிதி பங்களிப்பு செய்த தம்பலவத்தை எரிபொருள் நிரப்பு நிலைய பொறுப்பாளர் திருமதி.வே.பரமேஸ்வரி அவர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் மற்றும் ஆர்வலர்களுக்கும் எமது பிரதேச செயலகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகள்.....

❖ அடுத்து எமது அழைப்பினை ஏற்று பெருமனதோடு வருகை தந்து விழா சிறப்புற அமைவதற்கு எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய அதிதிகள் அனைவருக்கும் எமது பிரதேச செயலாளர் சார்பாகவும் கலாசார பேரவை சார்பாகவும் நன்றிகளை தெரிவிக்கின்றேன்.....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ மேலும் கலாசார ஊர்வலம் மற்றும் கலை நிகழ்வுகள் என்பவற்றினை வழமைபோல் இம்முறையும் வழங்கி விழா சிறப்புற ஒத்துழைப்பு வழங்கிய பாடசாலை மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கலை மன்றங்கள் அனைவருக்கும் எமது மனமுவந்த நன்றிகள்....

❖ மற்றும் இவ்விழா சிறப்பாக இடம்பெறுவதற்கு கலாசார மத்திய நிலையம் மற்றும் கலை நிகழ்ச்சிகளை தந்துதவிய அதன் பொறுப்பாளர் அவர்களுக்கும் நன்றிகள்....

❖ மேலும் பிரதேச இலக்கிய விழா மற்றும் இலக்கியப்போட்டிகள் என்பவற்றில் பங்குகொண்டு திறமைகளை வெளிக்காட்டிய எமது பிரதேச பாடசாலை மாணவர்கள் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கிய வலயக்கல்வி பணிப்பாளர், கோட்டக்கல்வி அதிகாரி ஆகியோருக்கும் எமது நன்றிகள்....

❖ மற்றும் இவ்விழாவினை முன்னெடுக்குமுகமாக நிதியுதவி வழங்கிய கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும் அதன் பணிப்பாளர் அவர்களுக்கும் எமது பிரதேச செயலாளர் சார்பாக மனமார்ந்த நன்றிகள்....

❖ மேலும் விழா சிறப்புற அமைவதற்கு பல்வேறு வேலைத்திட்டங்களில் பெரும் பங்களிப்பு செய்த எமது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்...

❖ மருதம் சிறப்பு மலரின் முன் அட்டைப்படத்திலுள்ள அழகிய காட்சியை வரைந்து மலரினை அலங்கரித்த சித்திரக்கலைஞர் ஆசிரியர் திரு.பு.சிறிகாந் அவர்களுக்கும், இம்மலருக்கான நூல் நயவுரையாற்றவுள்ள சிரேஸ்ட விரிவுரையாளர் திரு.க.மோகனதாசன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்...

❖ மேலும் மருதம் சிறப்பு மலரினை சிறந்த முறையில் அச்சுப்பதிப்புச் செய்த மாருதி அச்சகம் அதன் உரிமையாளருக்கும் எமது நன்றிகள்.....

❖ மேலும் ஊடகவியலாளர்கள், ஒலி ஒளி அமைப்பாளர்கள் உள்ளிட்ட இவ் விழாவுக்கான சகல வழிகளிலும் சிறப்புற அமைவதற்கு ஒத்துழைப்பும், ஆலோசனைகளும் வழங்கிய கலைஞர்கள், கலாசார பேரவை உறுப்பினர்கள், அலுவலக பணியாளர்கள் அனைவருக்கும் மீண்டும் விழித்துக்கொண்டு எனது இதயம் கனிந்த நன்றிகளை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

- நன்றி -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










"போரதீவுப்பற்று மக்களின் பாரம்பரியங்களையும்
கலாசாரத்தையும் பேணிப் பாதுகாப்போம்"

அழகு நகைகளின் அரங்கம்

# லாவண்யா ஜுவல்லரி

வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிகுடி.
Digitized by Noolaham Foundation
தொ.பே.: 065 2251263, 065 2250048